


# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 மேழம் நல்லோரை சித்திரைத் திங்கள் 10ம் நாள் நிறைமதி (23-04-2024 செவ்வாய்க்கிழமை) வெளியீடு +94 21 222 9722


## அப்பர் சுவாமிகள் குருபூசை




மேழம் நல்லோரை சித்திரைத் திங்கள் 20ம் நாள் (03-05-2024) சித்திரை சதயம் நாண்மீனில் அப்பர் சுவாமிகளின் குருபூசை நாள் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் கொண்டாடப்படும்.



கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரே
- சம்பந்தர் சுவாமிகள்

தேவாரப் பாடல் பெற்ற திருத்தலம்
திருக்கோணேச்சரம் - இலங்கை

படம் : திருமலை சோதிராசா செந்தூரன் (Shen Vlogs)



# புளியம்பொக்கணை நாகதம்பிரான் திருக்கோயில்

## பங்குனி உத்தர பொங்கல் விழா

கிளிநொச்சி மாவட்டத்தில் ஈழத்து நாட்டார் வழிபாட்டு பண்பாட்டில், நாகவழி பாட்டை பறைசாற்றும் கோயிலான கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் திருக் கோயில் வருடாந்த பங்குனி உத்தர பொங்கல் விழா கடந்த பங்குனித் திங்கள் 11ம் நாள் (24-03-2024) ஞாயிற்றுக்கிழமை, நிறை மதியுடன் கூடிய நன்னாளில் சிறப்பாக இடம்பெற்றது.

கோயிலின் வருடாந்த திருவிழாவின் ஆரம்பக் கிரியையான விளக்கு வைத்தல் கடந்த 17ஆம் தேதி ஆரம்பமாகி, பூசைகள் இடம்பெற்று தொடர்ந்து பிரம்பு வழங்கப் பட்டு, பாரம்பரிய முறைப்படி கோயிலிலி ருந்து மாட்டு வண்டில்களில் பண்டமெடுத்து வருவதற்காக மீசாலை புத்தூர் சந்தியில் அமைந்துள்ள பண்டமரவடிக்கு பத்தர்கள் சென்றனர்.

இவ்வாறு பண்டமெடுப்பதற்காக சென்ற மாட்டுவண்டிகள் கடந்த 23ஆம் தேதி பிற்பகல் 3 மணிக்கு பண்டமரவடியிலி ருந்து புறப்பட்டு, மறுநாள் 24ஆம் தேதி இரவு கோயிலை வந்தடைந்ததும் பொங்கல் விழா நடைபெற்றது. இவை ஆண்டுதோறும் நடைபெறும் சம்பிரதாயங்களாக இப்பிரதேச மக்கள் கடைப்பிடித்து வருகின்றனர்.

இம்முறை பொங்கல் விழாவில் அடியார் கூட்டம் அலைமோதியது. கோயில் சூழலும் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டு எழில்மிகு பிரதேசமாக காட்சியளித்தது. கோயிலில் நேர்த்திக்கடன்களை செய்ய வருகின்ற பத்தர்களுக்கான போக்குவரத்து மற்றும் சுகாதார வசதிகள் என பல்வேறு வசதிகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும் .

**திருச்சிற்றம்பலம்**

# திருகோணமலை போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட 400வது வருட நினைவேந்தல்



ஈழத்தமிழர்களின் பண்டைய வழிபாட்டுத்தலமும் பாடல்பெற்ற புராதன ஈச்சரமும் ஆகிய திருக்கோ ணேச்சரம் அந்நியர்களால் இடித் தழிக்கப்பட்ட போது உயிர்த்தியாகம் செய்த தமிழ் பெருமக்களை நினை வேந்தும் வகையில் இறை வழிபாடு கள் திருக்கோணேச்சரத்தில் தென்க யிலை ஆதீன குரு முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் திருமுன்னிலை வகிக்க கடந்த சித்திரைத் திங்கள் 1ம் நாள் (14-04-2024) ஞாயிறுக் கிழமை அன்று காலை 10.30 மணிக்கு இடம்பெற்றது.

இந்நிகழ்வானது கோணேசர் திருப்பதிகம் ஓதி வழிபாடுகளை நிறைவு செய்த பின் தொடரந்து, இந்த 400 வது நினைவேந்தல் ஆண்டு நிகழ்வுகளை எதிர்வரும் ஆண்டு முழுவதும் நாடாளாவிய ரீதியில் முன்னெடுத்தல் தொடர்பான வழி வரைபட கலந்துரையாடல், அடை யாள ஆவண நூல்நிலைய அங்கு ரார்ப்பணம், அறநெறி மாணவருக்கு நூல்கள் வழங்கல், மகேசுவர பூசை என்பன தென்கயிலை ஆதீனத்தில் அகத்தியர் அடிகளார் தலைமையில் இடம்பெற்றது. திருகோணமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வன்னி ஆகிய இடங்களிலிருந்தும் சிவனடியார்கள் வருகை தந்து, நினை வேந்தல் நிகழ்வில் கலந்துகொண்ட னர்.

**திருச்சிற்றம்பலம்**

# கோவை கற்பகம் நிகர்நிலை பல்கலைக்கழகத்தின் வேந்தர் தென்னாட்டிற்கு நூல்கள் அன்பளிப்பு



தென்னாடு செந்தமிழ் ஆகம சிவ மடத்தின் சார்பாக தொடர்ந்து சைவ சமயத்தில் இருக்கக்கூடிய பெரியோர் களை, சான்றோர்களை நேர்காணல் செய்யும் வகையிலே கோவை கற்பகம் நிகர்நிலை பல்கலைக்கழகத்தின் வேந்தர் சிவத்திரு இராச.வசந்தகுமார் ஐயா அவர்களை சந்தித்தோம். ஐயா அவர்கள் ஆற்றி வரும் அரும்பபணிகளை கேட்டு மகிழ்ந்தோம்.

திருப்பணிச்செம்மல் என்ற சிறப் பிற்குரிய ஐயா அவர்கள் தொடர்ந்து பாடல் பெற்ற பல்வேறு திருக்கோயில் களை புனரமைத்தும் குடமுழுக்காட்டி யும் வருகிறார். எல்லாவற்றிற்கும் மேலாக சைவ சமயத்தின் கருவூலமாக விளங்கக்கூடிய பன்னிரு திருமுறைகளை பாட்டும் பொருளும் என்ற வகையிலும், 14 சித்தாந்த சாத்திரங்கள் மற்றும் பண்டார சாத்திரங்களைப் பதிப்பித்து வெளியிட்டுள்ள ஐயா அவர்கள், அடுத்த கட்டமாக சைவ ஆகமங்களை தமிழில் வெளியிடுவது என்ற சீரிய நோக்கில் அந்த திருப்பணியை செய்து கொண்டிருக்கிறார். அதில் இதுவரை வெளிவந்துள்ள ஆகம நூல்களை தென்னாடு செந்தமிழாகம சிவமடத் திற்கு வழங்கி மகிழ்ந்தார்கள்.

**திருச்சிற்றம்பலம்**

# தெய்வத்தமிழில் தீக்கை பெற்றிட தென்னாட்டிற்கு வாருங்கள்!



சைவத்தமிழ் அன்பர்களே! நீங்கள் அனைவ ரும் சிவப்பேறு தந்திடும் தீக்கையினை தெய் வத்தமிழில் பெற்றிட அரிய வாய்ப்பினை தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் நல்கி யுள்ளது.

மறைமலை அடிகளார் வழிவந்த அருட்குருநாதர் ஒளியகம் ந. ஒளியரசு ஐயா அவர்களின் திருக்கரங்களாலே, முதலாம், இரண்டாம் தீக்கை என்றழைக்கப்படுகின்ற நுழைவு (சமய) தீக்கை, நோன்மை (விசேட) தீக்கை ஆகியனவற்றை பெற்று பேரருள் பெற்றிட தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளுங்கள்.

இந்நிகழ்வானது 23-05-2024 (வியாழக் கிழமை) அன்று தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் இடம்பெறும். எவ்வித கட்ட ணங்களுமின்றி முற்றிலும் இலவசமாக தீக் கைகள் பெற்றுக்கொள்ளலாம். தெரிவுசெய் யப்பட்டவர்கள் சைவப்பண்பாட்டு உடைகளு டன் வருகை தரவேண்டும். நோன்மை (விசேட) தீக்கை பெறுபவர்களிடத்தே தகைமைகள் எதிர்பார்க்கப்படும்.

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
**021 222 9722 / 070 770 1111**

**திருச்சிற்றம்பலம்**



தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்
தலைமை ஆசிரியர் – தென்னாடு,
+6149949 3300, thennavan@thennadu.org



# நாம் இனித் தழைக்க நாவன்மை நமக்கு வேண்டும்

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

களத்திலும் சரி புலத்திலும் சரி, இனி எங்கள் பண்பாடு, மொழி, சமயம், வாழ்வியல், வரலாறு ஏன் அரசியல் மீண்டும் புத்துயிர் பெறவேண்டுமாயின் நம்மிடையே அறிவியல் மற்றும் ஆதாரங்களுடன் ஆணித்தரமாக பேசும் பேச்சாளர்கள் தேவை. இது தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழி வழி இருத்தல் அவசியமாகின்றது. எங்கள் மொழியில் பெருமை, வரலாறு போன்றவற்றையும், சைவத்தின் உட்பொருள் உண்மைகளையும் மற்றவர்களுக்கு எடுத்துச்செல்ல நாவன்மை மிகவும் முக்கியம்.

முன்னைய காலங்களில் கோயில்களில் சொற்பொழிவுகள், பிரச்சாரங்கள், வில்லிசை, நாடகங்கள்,பண்ணிசை நிகழ்ச்சிகள், நடனங்கள் போன்றவற்றின் ஊடாக சமயக் கருத்துக்கள் மக்களிடையே ஆழமாக விதைக்கப்பட்டன. தற்போது இவை அருகி வருவதை நாம் கூர்ந்து கவனிக்கவேண்டும். அவற்றை ஈடுகொடுக்க நாங்கள் செய்ய வேண்டியவற்றையும் சிந்திக்கத் தொடங்க வேண்டும்.

பேச்சாளர் என்பவர் பேசும் போது மட்டுமல்ல, பேசிய பின்னும் கேட்போர் மனங்களில் நிற்கவேண்டும். அவர்கள் கூறிய விடயங்கள் வாழ்வியல் வழிகளில் எதிர்ப்படும் போது அது பேச்சாளரை நினைவுபடுத்தவேண்டும். ஏன் அவர்களை தங்கள் முன்னோடிகளாக சிந்தித்து பின்தொடர வைக்கவேண்டும். இப்படியான பேச்சாளர்கள் எம்மிடையே இன்று உள்ளார்களா என்ற கேள்வி எழத்தான் செய்கிறது. ஓர்சிலர் உளர், வேறுசிலர் பணத்திற்காக மட்டுமே வாய்திறப்பர். நாளுக்கு நாள் சித்தாந்தத்தை மாற்றுவார். இப்படியான பேச்சாளர்களை ஒரு வாசகர் இந்த யுகத்தில் தொடர்ந்து பின்தொர்வது கடினமாகிறது.

மேலும், பேச்சாளர்கள் வெறுமனே பேச்சாளராக மட்டும் இல்லாமல் சிந்தனையாளர்களாக தங்களை மாற்றிக் கொள்ள முன்வரவேண்டும். நாக்கினால் நல்ல நாடகம் ஆடி, நல்ல தமிழில் மேடையில் பேசினால் மட்டும் இனி புதிய தலைமுறையினரிடம் எடுபடாது, நிச்சயமாக தத்துவச் சிந்தனைகள், ஆழ்ந்த அறிவு என்பன கட்டாயம் தேவை. இப்படி இருந்தால் மட்டுமே இனிவரும் சமுதாயத்திடம் நாங்கள் ஈடுகொடுக்க முடியும் என்பதனை வளர்ந்து வரும் பேச்சாளர்கள் சிந்திக்கவேண்டும்.

இதனைக் கருத்தில் கொண்டு, நாங்கள் எங்கள் சமுதாய மேம்பாடு என்று பொருள்கள் மற்றும் கட்டிட உதவிகளுடன் மட்டும் நின்றுவிடாது அறிவை, ஆளுமையை அதனுடன் சேர்த்து பேச்சுவன்மையை இளையோரிடம் வளர்க்கும் செயற்றிட்டங்களையும் முன்னெடுக்கவேண்டும். அதனைத் தொடர்ந்து இடைவிடாது செய்யவேண்டும். ஒரு சிந்தனையாளரால் தான் சமுதாய மாற்றம் வீறு கொள்ளும் என்பதை நாம் உணரவேண்டும். இது தமிழ் மொழிக்கும் மற்றும் எங்கள் பண்பாட்டுக் கூறான சைவ சமயத்திற்கும் நன்கு பொருந்தும்.

ஆகவே, அன்பான பெருமக்களே இதனைச் சற்றுத் சிந்தித்து, உங்களால் இயன்ற, உங்கள் ஆளுகை வட்டங்களில் இப்படியான சமய மற்றும் மொழிச் சிந்தனையாளர்கள், பேச்சாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் , அறிவாளிகளை உருவாக்க முன்வாருங்கள். எங்கள் நிலத்திலும், புலத்திலும் இதற்க்கான தேவை நிறையவே உண்டு. இது காலத்தின் தேவையும் கூட என்பதை கருத்தறிந்து செயற்படவேண்டிய நேரமிது.

**நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்**
**யாநலத்து உள்ளதூஉம் அன்று - (குறள் - 641)**
**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**

# கொக்குவில் காசி விசுவநாதர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா



யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கில் கோணாவளை ஒழுங்கையில், கந்தையா சுசீந்திரன் குடும்பத்தினரால் அமைக்கப்பட்ட (யாழ் விஷன் இந்துமன்றம்), அருள்மிகு விசாலாட்சி அம்மை உடனுறை காசி விசுவநாதர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவானது சிறப்பாக நடந்தேறியுள்ளது.

இவ்விழாவானது கடந்த பங்குனித் திங்கள் 11ம் நாள் (24-03-2024) ஞாயிற்றுக் கிழமை, நிறைமதியுடன் கூடிய நன்னாளில் சிறப்பாக இடம் பெற்றது. வெண்ணிற இலிங்கம் மற்றும் நந்தியுடன் ஏனைய சுற்று தெய்வங்களுடன், எம்பெருமானின் 108 சிவதாண்டவ சிலைகளையும் உள்ளடக்கப் பெற்றதுமான, அழகிய கற்றளிக் கோயிலாக மிளிரும் காசி விசுவநாதர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவினை, சிவத்திரு. பா. நரேந்திராக்குருக்கள் தலைமையில் பல சிவாச்சாரியார்கள் இணைந்து ஆற்றியிருந்தனர். பல ஓதுவாமூர்த்திகளும் இந்நிகழ்வில் பங்கு கொண்டு திருமுறை, பண்ணிசை விண்ணப்பங்கள் மேற்கொண்டிருந்தனர்.

மேலும் இந்நிகழ்வின் சிறப்பம்சமாக தருமையாதீன திருச்சி மௌனமட கட்டளை விசாரணைத் தம்பிரான் முனைவர் சீர்வளர்சீர் மௌன திருஞானசம்பந்த சுவாமிகள் கலந்து கொண்டு அருளாசியினை வழங்கியிருந்தார். மேலும் நல்லை ஆதீனம் மற்றும் சிவகுரு ஆதீன முதல்வர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

**திருச்சிற்றம்பலம்**

# கீரிமலையில் குழந்தைவேற்சுவாமிகளின் குருபூசை வழிபாடுகள்



ஈழத்து சித்தர்களில் பெரும் பேறுடைய வரும் அருளம்பலம் சுவாமிகளின் குருவுமான குழந்தைவேல் சுவாமிகளின் குருபூசை, கீரிமலை குழந்தை வேற்சுவாமிகளின் சமாதி சிவாலயத்தில் சிறப்பாக இடம்பெற்றது. இந்நிகழ்வானது பங்குனித் திங்கள் 25ம் நாள் (07-04-2024) ஞாயிற்றுக்கிழமை அன்று, அகில இலங்கை சைவ மகா சபையினரால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இக்குருபூசை விழாவில் சைவமகாசபை உறுப்பினர்களும் குழந்தை வேற்சுவாமிகளுடைய பரம்பரை உறவுகளும், அறநெறிப்பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டு வழிபாடுகளில் பங்குபற்றினர். இந்நாளில் சிவப்பெருவேள்வியும் சிறப்பு திருமஞ்சனமும் நடைபெற்று, பூசையும் திருமுறைவிண்ணப்பமும் செய்யப்பட்டு தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

மேலும் சிறப்பம்சமாக தெய்வத்தமிழில் நுழைவு தீக்கை (சமய தீக்கை) வழங்கலும் இடம்பெற்றது. குழந்தைவேற்சுவாமிகளின் குருபூசை தினத்தில் ஐம்பதுக்கு மேற்பட்ட அறநெறிப்பாடசாலை மாணவருக்கும் ஆசிரியர்களுக்கும் சமயதீக்கை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

**திருச்சிற்றம்பலம்**

## யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை மங்களநாதர் திருக்கோயிலில் தெய்வத்தமிழில் 2ம் ஆண்டு சங்கு நீராட்டு வழிபாடுகள் (21-03-2024)



## கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை தாயுமானவர் சுவாமி திருக்கோயிலில் தெய்வத்தமிழில் 1ம் ஆண்டு சங்கு நீராட்டு வழிபாடுகள் (24-03-2024)



தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு. தென்னாடு நிலவன்
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org



# தென்னாடு நிறைமதி அறிக்கை

(21-03-2024) – யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை மங்களநாதர் திருக்கோயிலில் இரண்டாம் ஆண்டு சங்கு நீராட்டு தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தால் சிறப்பாக ஆற்றி வைக்கப்பட்ட்டது.

(24-03-2024) – கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை தாயுமானவர் சுவாமி திருக்கோயிலில் முதலாம் ஆண்டு சங்கு நீராட்டு தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தால் சிறப்பாக ஆற்றி வைக்கப்பட்ட்டது.

(24-03-2024) – தென்னாடு திங்கள் இதழின் நாற்பத்து மூன்றாவது இதழ் வெளியீடு, பங்குனித் திங்கள் 11ம் நாள் ஞாயிற்றுக்கிழமை அன்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக நயினை நாகபூசனி அம்மன் ஆலய நிர்வாக சபைத் தலைவர் சிவத்திரு கந்தசாமி பரமலிங்கம் ஐயா அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார். அன்றைய தினம் பரமலிங்கம் ஐயா அவர்களின் நீண்ட சமயச் சேவைகளைப் பாராட்டி தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் "செந்நெறிச் செம்மல்" என்ற உயரிய விருதினை வழங்கி கௌரவம் செய்திருந்தது. மேலும் இந்நிகழ்வில் வேதாந்த மடத்தை சேர்ந்த வேதவித்தியாசாகர் சுவாமிகள், கொக்குவில் இந்துக் கல்லூரியின் புதிய அதிபர், மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர். மேலும் அன்றைய தினம் தருமை ஆதீனத்தின் திருச்சி மௌனமட கட்டளைத் தம்பிரான் சுவாமிகள், வேலன் சுவாமிகள், யாழ் விஷன் இந்து மன்ற நிறுவுனர் சுசீந்திரன் ஐயா ஆகியோரும் தென்னாடு சிவமடத்திற்கு வருகை தந்திருந்தனர்.

(03-04-2024) – சிவத்திரு. சிவபாதசுந்தரம் இராஜேஸ்வரன் அவர்களின் ஆண்டுத் திதி வழிபாடு இடம்பெற்றது.

(06-04-2024) – பங்குனித் திங்கள் தேய்பிறை கழுவாய் வழிபாடுகள் இடம்பெற்றன.

(08-04-2024) – செல்லப்பா சுவாமிகள் குருபூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

(13-04-2024) – பகைக்கேடு புத்தாண்டிற்கான சிறப்பு பூசை வழிபாடுகள் இரவு 8.15 மணிக்கு தென்னாட்டில் இடம்பெற்றன.

(16-04-2024) – கொடையாளர் சிவத்திரு. சுப்பிரமணியம் சுபதாசன் அவர்களின் உறவினர்கள் தென்னாட்டிற்கு வருகை தந்து வழிபாடாற்றியிருந்தனர். மேலும் அண்ணாமலையார் மற்றும் மங்களநாதர் திருக்கோயில்களிலும் வழிபாட்டில் கலந்து கொண்டனர்.

(18-04-2024) – தென்னாடு சிவமடத்தில் கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் அர்ச்சகராக பணியாற்றி ஓய்வுபெறும் தினகரன் ஐயா அவர்களிற்கு கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

(20-04-2024) – திருமதி. சிவநேசரத்தினம் குணரத்தினம் அவர்களின் ஆண்டுத் திதி வழிபாடு இடம்பெற்றது.

(21-04-2024) – சித்திரைத் திங்கள் வளர்பிறை கழுவாய் வழிபாடுகள் இடம்பெற்றன.

திருச்சிற்றம்பலம்

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர்.
மருத்துவர்
ஈசான பிரதாபன்
தேசிகர்

## 1) சரபரை திருமால் ஒடுக்கினாரா?

திருமால் நரசிம்ம அவதாரம் எடுத்து இரண்யனை அழித்தபோது, இரணியனின் குருதியைக் குடிக்கின்றார். உயிர் ''சார்ந்ததன் வண்ணம்'' என்று சைவசமயம் கூறுகின்றது. எனவே, தீயவனின் குருதியைக் குடித்தமையினால், தீமைக்குணம் நரசிம்மருக்கும் ஏற்படுகின்றது.

**தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற**
**தீயார் சொற் கேட்பது வுந்தீதே - தீயார்**
**குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோ (டு)**
**இங்கி இருப்பதுவுந் தீது. - மூதுரை**

சார்ந்ததன் வண்ணக்கோட்பாட்டை ஔவையார் மூதுரையில் அருளிச்செய்திருப்பதும் இதன்பொருட்டேயாகும். எனவே, நரசிம்மர் இரணியனின் குருதியைக் குடித்தமையினால், கொடூரத்தன்மை பெற்று உலகெல்லாம் அழிக்கத் தொடங்குகின்றார். அப்போது, சிவபெருமான் சரப வடிவம் எடுத்து நரசிம்மரை ஒடுக்குகின்றார்.

இப்புராணச் செய்தியை ஏற்கவிரும்பாத வைணவம், சரபரை நரசிம்மர் ஒடுக்கினார் என்று இட்டுக்கட்டலாயினர். நூல் பிரமாணத்தை (நூல் சான்றுகளை) அந்தந்த நூலினை ஏற்போரே ஏற்பர் என்பதினால், எல்லாச் சமயத்தவரிலும் விளங்கக்கூடிய அறிவுடையோர் தெளிவதற்கு யுத்திப்பிரமாணமே (சிந்தித்துத் தெளிதல்) ஏற்புடையதாகும்.

நரசிம்மர் வரவேண்டிய தேவை ஏற்பட்டது இரணியனை அழிக்கவாகும். சரபர் வரவேண்டிய தேவையேற்பட்டது நரசிம்மர் இரணியனைக் கொன்றபின் ஆணவம் பெற்று நின்றமையினாலாகும். சரபரை நரசிம்மர் வென்றார் என்று வைணவர் கூறுமுகத்தாற், தம்மை அறியாதே சரபர் வந்தார் என்பதையும், சரபர் வந்தார் என்பதனால் நரசிம்மர் ஆணவம் கொண்டார் என்பதையும் ஏற்றதாக முடியும். ஆக, சரபர் விசயத்தை வைணவம் ஏற்காமல் இருப்பதற்கு அவர்களுக்கு இருக்கக்கூடிய உத்தம மார்க்கம், அப்படியான புராணச்செய்தியையோ சைவாகாம விசயத்தையோ தாம் ஏற்கவில்லை என்று மறுப்பதேயாகும். அதனைவிடுத்து, சரபரை நரசிம்மர் வென்றார் என்று கதையெழுதுவது, அவர்களை அறியாமலே அவர்கள் நரசிம்மர் ஆணவம் கொண்டார் என்பதனை ஏற்பதாக முடிவுறும். எனவே, வைணவ பரத்துவத்துக்கே குழிபறிக்கும் "சரபரை நரசிம்மர் வென்றார்" என்னும் பொய்க்கதை, அறிவுடைய வைணவரால் உருவாக்கப்பட்டிருக்கா! சரபரை நரசிம்மர் வென்றார் என்பது வைணவத்திற்கே பொருத்தமில்லாத் வைணவருக்கே கேட்டினைக் கொடுக்கும் வைணவக்கதை என்பதால், இது அறிவற்ற வைணவரால் உருவாக்கப்பட்ட பிற்கால இட்டுக்கட்டென்று தள்ளுக.

## 2) நரசிம்மரை ஒடுக்கிய சரபருக்கு நரசிம்மர் பெற்றிருந்த அசூரக்குணம் சார்ந்ததன் வண்ணமாய்ச் சேராதிருந்தது எங்ஙனம்?

சிவபெருமான் பதிப்பொருள். திருவாசகத்தில் விளங்கும் "சேர்ந்தறியாக் கையானை எங்கும் செறிந்தானை" என்பதற்கு சைவப்பெரியார் ஆனந்தராசன் பெருமகனார் அருமையான விளக்கம் தருகின்றார். சிவபெருமான் உயிர்களோடும் உலகோடும் கலந்து நின்றாலும் அவற்றின் இயல்பைப் பெறமாட்டான் என்பதாகும்.

திருக்குறளுக்கு உரைசெய்த வைணவப்பெரியாராகிய பரிமேழலகர், எண்குணத்தான் என்பதற்கு சைவாகமங்களின் விதிக்கப்பட்டவாறு எண்குணம் உடையவன் என்னும் செய்தியைச் சுட்டிக்காட்டுகின்றார். சிவபெருமானின் எண்குணங்களில் ஒன்று ''இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்கியவன்'' என்பதாகும். அதாவது சிவபெருமான் பாசப்பொருள்கள் யாவற்றிலும் நீக்கமறக் கலந்து நிறைந்து விளங்கினாலும் ஆணவம்,கன்மம்,மாயை என்னும் அப்பொருள்களால் ஒருபோதும் தாக்கத்திற்கு உள்ளாகமாட்டான். எனவே, சிவபெருமானுக்கு சார்ந்ததன் வண்ணமாகும் இயல்பு இல்லை. உயிருக்கே அவ்வியல்பாகும். இதுவே சைவசித்தாந்த முடிவுமாகும்.

## 3) அப்படியானால், திருமாலுக்கு மட்டும் சார்ந்ததன் வண்ணமாகும் இயல்பு எங்ஙனம் கூறமுடியும்?

சைவத்தில் திருமால் இருதிறத்தில் கூறப்படுகின்றார். சிவபெருமானே திருமாலாக வடிவம் தாங்குவது சம்புபட்சத் திருமால் எனப்படுவார். சிவபெருமான் சுத்தவித்தைத் தத்துவத்தில் தாங்கும் இவ்வடிவம் சிவவடிவமேயாகும். இத்திருமாலே, ''அரியலால் தேவியில்லை'' என்று அப்பர்சுவாமிகள் அருளிய திருமால். இவரே மாலொருபாகனாய் விளங்கும் திருமால். அதுபோல், பக்குவ உயிர்கள் திருமால் பதவியில் விளங்குவர். அவ்வாறு விளங்கும் திருமால் அணுபட்சத் திருமால் எனப்படுவார். அணுவென்றால் உயிரென்று பொருட்படும். இத்திருமால் பிறப்பு இறப்பு முதலியவற்றுக்கு உள்ளாகும் அவதாரங்களும் ஆணவமும் மயக்கமும் உடைய செயல்களுக்கு உள்ளாகித் தண்டனைகளும் பெறும் செய்திகள் புராண இதிகாசங்களில் உண்டு. அதாவது, இவர் ஆணவம்,கன்மம்,மாயை என்னும் மும்மலங்களையும் உடைய சகலவர்க்க ஆன்மாவினரேயாகும். புண்ணியவிசேடத்தால் திருமால் பதவியினைப் பெற்றவராவார். இவரே, தசவதாரத்திருமாலும் அடிமுடி தேடிய திருமாலும் ஆவார். இத்திருமால் வர்க்கத்தையே ''நூறுகோடி பிரமர்கள் நொந்தினர் ஆறுகோடி நாராயணர் அங்ஙனே'' என்று அப்பர்சுவாமிகள் அருளிச்செய்துள்ளார். இந்த உயிர்வர்க்கத் திருமாலையே வைணவசமயம் பரம்பொருள் என்றும், சுமார்த்தமதம் சகுணப்பிரம்மத்தின் மங்களவடிவம் என்றும் கொண்டு மயங்கி நிற்கின்றனர்.

சைவத்தைப் பொறுத்தவரை கருவாசம் பிறப்பு இறப்பு என்பன வினைவசத்தால் வருவதேயாகும். எனவே, அவதாரத்திருமால் உயிர்வர்க்கம் என்பதால், இரணியனை வதைத்து இரணியனின் குருதியைக் குடித்தபோது, நரசிம்மர் சார்ந்ததன் வண்ணமாகி, அசுரகுணம் பெறலாயினார்.

இராமாயணத்தில் இராமன் சீதையின் இழப்பால் அழுது வாடியதும், இறுதியில் இலக்குவணன் முதலியோரது பிரிவு தாங்கமுடியாது வருந்தி நின்றதும், சராயுநதியில் மூழ்கி உயிரைவிட்டதும், மகாபாரதத்தில் கண்ணன் மனம் நொந்து காட்டிற்குச் சென்று தியானத்தில் இருந்து வேடுவனின் அம்புக்கு இலக்காகி மரணம் எய்தியதும் என்று இருப்பதே திருமால் சார்ந்ததன் வண்ணமாகி நிற்கும் நிலைக்குத் தக்க சான்றுகளுமாகும். இராமன் இராவணனை வெல்வதற்கு சுக்கிரீவனின் நட்பை வேண்டி நின்றதும், கடினப்பட்டுப் பாலம் கட்டியதும் இராமன் மனித அவதாரத்தில் இருந்தமையினால் மனித இயல்பைப் பெற்று நிற்கவேண்டியதாலேயேயாகும் என்று வைணவரும் கூறிவருதல் கண்கூடு. இராமனுக்கு இறுதித் தருணத்தில் பிரம்மா தோன்றி, "இராமா, திருமாலே நீ வைகுண்டமே உன் இருப்பிடம்'' என்று உணர்த்திச் சராயுநதியில் மூழ்கச்செய்து வைகுண்டத்திற்கு எழுந்தருளச் செய்வதினாலேயே, இராமன் மானிட வடிவம் தாங்கியபோது சார்ந்ததன் வண்ணமாகி, ஏகதேச அறிவோடு மானிடனாய் வாழ்ந்தான் என்பது பெறப்படும். இராம அவதாரத்திலும் கண்ணன் அவதாரத்திலும் சார்ந்ததன் வண்ணமானவன், நரசிம்ம அவதாரத்தில் அசுரக்குருதி குடித்து அசுர இயல்புபெற்று சார்ந்ததன் வண்ணமாகி, உலகமெல்லாம் அழிக்கும் கொடூரத்தன்மை பெற்றான் என்பதில் எக்குறையும் இல்லை. அது உயிரின் இயல்பேயாகும். இராமாயணமும் மகாபாரதமும் உறுதிசெய்யும் திருமாலின் இயல்பேயாகும்.

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,
ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 575 2551 / aathan@thennadu.org



# வெம்மை தவிர்ப்போம்!

கோடை காலத்தின் வெம்மை எம்மை வாட்டி வதைக்கின்றது. பருவகால மாற்றங்கள் உலகம் முழுவதையும் பாதித்தே இருக்கின்றது. பாலைவன தேசங்களில் மழைவீழ்ச்சியும், நம் நாட்டில் கடும் வறட்சியும் உண்டாகி காலநிலைச் சமநிலை பிழைத்து விட்டதோ என எண்ணத்தோன்றுகிறது. இந்த நிலை தொடருமானால், குறிப்பாக குடிநீருக்கான தட்டுப்பாடு இங்கு உருவாகலாம். மரங்களை கணக்கின்றி வெட்டி அழித்தும் காடுகளை எரியூட்டியும் மனித குலம் தன்னைத் தக்க வைக்க எடுத்த பிழையான முடிவுகள் இன்று மனித குலத்தையே வாட்டி வதைக்கின்றது. சைவ சமயிகளாகிய நாம் எம் முன்னோர் காட்டிய வழியில் நடந்தால் இந்த காலநிலை மாற்றத்தை வெற்றிகரமாக எதிர்கொள்ளலாம். சைவ சமயம் சூழலுக்கு நேயமானது. மனிதர்களைப் போலவே பூமியையும் நேசித்த சமயம் இது.

இறைவனோடு இரண்டறக் கலந்த பல நாயன்மார்கள் இந்த பூமியை இயற்கையை நேசித்தவர்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

அப்பூதியடிகள் வறட்சியில் இருந்து சக மனிதர்களைக் காப்பதற்காக தண்ணீர் பந்தல் அமைத்து வைத்தார். தண்ணீர் கூட விலைபொருள் ஆகிவிட்ட இந்தக்காலத்தில் நாம் அப்பூதியடிகளின் செயலை தொடர வேண்டியது காலத்தின் தேவை. சேவையே செய்தாலும் அதை தன் பெயரில் செய்யாமல் திருநாவுக்கரசநாயனாரின் பெயரால் செய்து நிறைந்தவர் அப்பூதியடிகள்.

இவ்வாறே திருவாரூரில் வாழ்ந்த தண்டியடிகள் திருக்குளத்தை சீர்செய்ய தன்னையே வருத்தியவர். இவர் பிறவியிலேயே கண் பார்வை இழந்தவர். புறக்கண் அற்ற இத்தொண்டர் அகக் கண்களால் திருவாரூர்த் தியாகேசப் பெருமானின் திருத்தாளினைக் கண்டு, எந்நேரமும் இடையறாமல் வணங்கி வழிபட்டு வந்தார். இவர் காலத்தில் திருவாரூரில் சமணர்கள் ஆதிக்கம் சற்று பரவியிருந்தது. அதனால் சமணர்கள் சைவத் தொண்டர்களுக்குப் பற்பல வழிகளில் இன்னல்களை விளைவித்தனர். தண்டியடிகள் நீராடும் கமலாலய திருக்குளத்திற்கு பக்கத்தில் சமணர்கள் பல மடங்களைக் கட்டிக்கொண்டு தங்கள் மதப் பிரசாரத்தை நடத்தி வரலாயினர். சமணர்கள் குளத்தை மண் இட்டு மூடிவிடுவார்களோ என்று வேதனைப்பட்டு குளத்தின் பரப்பையும், ஆழத்தையும் பெரிதுபடுத்தி தம்மால் இயன்றளவு திருப்பணியைச் செய்ய எண்ணினார் அடிகளார்.

கண்ணற்ற அடிகளார் இறைவனின் அருளால் குளத்தின் நடுவிலும், குளத்தைச் சுற்றிலும் அடையாள முளைகள் நட்டுக் கயிறும் கட்டினார். மண்ணை வெட்டி வெட்டி கூடையில் எடுத்துக் கொண்டு கயிற்றை அடையாளமாகப் பிடித்துக்கொண்டு வந்து கொட்டுவார். நாயனாரின் நல்லெண்ணத்தைப் புரிந்துகொள்ள சத்தியற்ற சமணர்கள் அவருக்கு இடையூறுகள் பல விளைவிக்கத் தொடங்கினர். சமணர்கள் நாயனாரை அணுகி இவ்வாறு நீங்கள் மண்ணைத் தோண்டுவதால் இக் குளத்திலுள்ள சிறு உயிர்கள் எல்லாம் இறந்துபோக நேரிடும். உமது செயல் அறத்திற்குப் புறம்பானது என்றனர். அவர்கள் பேச்சைக் கேட்டு தமக்குள் சிரித்துக் கொண்ட தண்டியடிகள், கல்லிலுள்ள தேரைக்கும், கருப்பை உயிருக்கும் நல்லுணவு தந்து காக்கும் ஈசனுக்கு, இந்த உயிரினங்களை எப்படிக் காக்க வேண்டும் என்பது தெரியும். திருசடையானுக்கு நான் செய்யும் இப்பணியால் சிறு உயிரினங்களுக்கு மட்டுமல்ல, உங்களுக்கும் எவ்வித தீங்கும் நேராது என்றார். சமணர்கள், உம்மைக் குருடன் என்றுதான் எண்ணினோம். காது மந்தம் போல் இருக்கிறது! இல்லாவிட்டால் நாங்கள் உயிர்கள் இறக்கும் என்று சொல்லி எடுத்து விளக்கும் உண்மையை புரிந்துகொள்ள முடியாமல் போகுமா என்ன? என்று சொல்லிக் கேலியாகச் சிரித்தனர். திரிபுரத்தை எரித்த விரிசடைக் கடவுளின் திருவடியைப் போற்றித் தினமும் நான் அகக் கண்களால் கண்டு களிக்கிறேன் என்றவாறு பணிசெய்து, சமணர்களின் பார்வையும் கெட்டு அவர்கள் ஊரை விட்டு அகலவும் தன் இறையன்பால் சாதித்தவர் திருத்தண்டியடிகள்.

குளம் அமைத்தும் வனம் அமைத்தும் இறைவனை அடையலாம் என்று நிரூபித்துக்காட்டிய அடியவர்கள் வழியில் நாமும் நீர் நிலைகளைக்காத்தும் வனங்களை காத்தும் வெம்மையில் இருந்து எம்மைப்பாதுகாப்போமாக!

திருச்சிற்றம்பலம்

# நல்லை ஆதீனத்தில் சிறப்புற இடம்பெற்ற சிந்தனை அரங்கம்



அறிவாலயம் ஆளுமை விருத்தியக ஏற்பாட்டில் தமிழகத்தின் பிரபல பேச்சாளர் இலக்கிய சுடர் இராமலிங்கம் ஐயா அவர்கள் பங்கேற்ற சிந்தனை அரங்கம் கடந்த 07-04-2024 அன்று சனிக்கிழமை மாலை செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நல்லூரில் நடைபெற்றது.



விவசாய அமைச்சின் உத்தியோகத்தர் நடராஜா ஐங்கரனின் முன்னிலைப்படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை வழங்கினார். தமிழி அமைப்பின் பெருந் தலைவர் நிவேதன் வரவேற்புரை ஆற்றினார்.

நிகழ்வில் இளைஞர்களின் எதிர்காலத்தை ஆகச் சிறப்பாக செப்பனிடுவது எந்த சூழல் என்ற வகையில் வீட்டுச் சூழலே என தென்னாடு பத்திரிகை ஆசிரியர் சிவசெந்தமிழாதனும், கல்வி சூழலே என கிழக்கு பல்கலைக் கழக மருத்துவ பீட மாணவி கிளிநொச்சி அபிராமியும், நட்புச் சூழலே என பேராதனை பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் சாரங்கனும், சமுதாய சூழலே என தமிழ்நாடு தேவகோட்டை யோகேஸ்குமாரும் கருத்துரைத்தனர்.

இலக்கிய சுடர் இராமலிங்கம் ஐயா அவர்கள் நடுவராக செயற்பட்டார். இலக்கிய சுடர் இராமலிங்கம் ஐயா அவர்களை கல்விக் காருண்யன் ஈ எஸ் பி நாகரத்தினமும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மூத்த விரிவுரையாளர் கு. பாலசண்முகனும் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் கௌரவித்தனர். நிகழ்வில் நூற்றுக்கணக்கான இலக்கிய ஆர்வலர்கள் பங்குபற்றினர்.

திருச்சிற்றம்பலம்



# வழிபாடு - மந்திரம் - வேள்வி

**தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருநாமம் செப்பல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே** - திருமந்திரம்

இன்றைய வாழ்க்கையின் வசதியான நிலையை அடைவதற்கு மக்கள் பல படி நிலைகளைக் கடந்து வந்துள்ளனர். தொடக்க காலத்தில் காட்டு விலங்குகளைப் போல் குகைகளிலும் மரப்பொந்துகளிலும் வாழ்ந்தனர். பின் கற்கருவிகளைப் பயன்படுத்தினர். அடுத்து உலோகங்களைப் பயன்படுத்தினர். நாடோடிகளாக வேட்டையாடுதல், கால்நடைகளை மேய்த்தல் முதலியவற்றை மேற்கொண்டனர். நிலையாகத் தங்கிப் பயிரிடுதலைத் தொடங்கினர். இறந்தோரைக் குழிகளில் புதைத்தனர். இவை எல்லாம் வரலாற்றுக்கு முற்பட்ட காலமாகும். அக்காலத்தில் நீர், நெருப்பு, காற்று முதலியவற்றிற்கு ஆற்றலிருப்பதாகக் கருதி வழிபட்டனர்.

கி.மு. பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்பெறும் ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வில் முருக வழிபாட்டின் தொன்மைக்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. சேவல், வேல் முதலிய உருவங்கள் அங்குக் கிடைத்துள்ளன. கி.மு. 2500க்கும் - கி.மு. 1500க்கும் இடைப்பட்டதாகக் கருதப்பெறும் சிந்துவெளி நாகரிகத்தில் சிவலிங்கம், காளி முதலிய வழிபாட்டுச் சான்றுகள் கிடைத்துள்ளன.

கொற்றவை, முருகன் ஆகியவை தமிழ் மக்களின் மிகத் தொன்மையான வழிபாட்டுத் தெய்வங்கள் என்பார் கலாநிதி. க. கைலாசபதி அவர்கள். இக்கொற்றவை வழிபாடு பிற்காலச் சக்தி வழிபாட்டுக்கு அடிப்படையாகும். சக்தியின் பிரதிநிதிகளே இன்றைய கிராம தேவதைகள் ஆவர். இப்பெண் தெய்வங்கள் யாவும் ஆரியருக்கு முற்பட்ட செல்வாக்கு உள்ள தெய்வங்கள் என்பர் ஆய்வாளர். வைதிக இலக்கியத்தில் முதன் முதலாகக் கேனோபநிடதத்தில் உமையம்மையைக் காண்கிறோம் என்பார் டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன். கோயிலோ, உருவ வணக்கமோ ரிக் வேதத்தில் இடம்பெறவில்லை.

பழந்தமிழர் கொற்றவை வழிபாட்டைச் சிறப்பாகப் போற்றினர். தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் கொற்றவை வழிபாட்டைக் குறிப்பிடுகின்றன. போர்த்தெய்வமாகவே கொற்றவை போற்றப் பெறுகின்றாள். பிரிந்து சென்ற தலைமகன் விரைவில் திரும்பி வந்து நீங்காது உடன் உறைதல் வேண்டும் என்று தலைவி கொற்றவையை வேண்டுவதாகக் குறுந்தொகைப் பாடல் குறிப்பிடுகின்றது. கொற்றவையை வாழ்க்கைத் தெய்வமாகவும் வழிபட்டதை இதனால் அறியமுடிகின்றது.

முருகன் வழிபாடு பற்றித் தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும் விரிவாகக் குறிப்பிடுகின்றன. மக்கள் மீது முருகன் வந்து ஆடுவதை 'வெறியாட்டு' என்று சங்க காலத்தில் குறிப்பிட்டனர். முருகன் கோயில் பூசாரி கையில் வேலை வைத்து ஆடுவதால் வேலன் எனப்பட்டான். வேலனிடம் மந்திர சக்தி இருப்பதாக நம்பினர். திருமுருகாற்றுப்படையும் பரிபாடல்களும் முருகன் வழிபாட்டை விரிவாகக் கூறுகின்றன. அந்தணர் வழிபட்ட முறை, குன்றக்குறவர், குறத்தியர் வழிபட்ட முறை இரண்டும் திருமுருகாற்றுப்படையில் காணப்படுகின்றன.

பரிபாடலில், **"யாம் இரப்பவை பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால் அருளும் அன்பும் அறனும் மூன்றும், உருள் இணர்க் கடம்பின் ஒலி தாரோயே"** என்ற உயர்ந்த வழிபாடும் உண்டு.

'கனவில் கண்டது நனவில் உண்மையாக வேண்டும்' என்று வேண்டுதல், 'கருவயிறு உறுக' என்று வேண்டுதல், 'செய் பொருள் வாய்க்க வேண்டும்' என்று வேண்டுதல், 'போரில் வெற்றிபெற வேண்டும்' என்று வேண்டுதல், முதலிய வழிபாட்டு முறையும் பரிபாடலில் உண்டு. திருப்பரங்குன்றத்தின் அடியிலேயே சுற்றத்தாருடன் சேர்ந்து இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்ற நிலை பரவலாகப் பேசப்படுகின்றது. தமிழை ஆய்ந்தவரே திருப்பரங்குன்றத்தின் பெருமையை அறிவர் என்றும் கூறப்படுகின்றது.

திருமால் வழிபாட்டிலும் இத்தகைய நிலை காணப்படுகிறது. மகளிர், பெற்றோர், கைக் குழந்தை, மனைவியார் ஆகியோருடன் சென்று தொழுங்கள் என்ற பொருளில்,

**'தையலவரொடும் தந்தாரவரொடும்**
**கைம்மகவோடும் காதலவரொடும்**
**தெய்வம் பேணித்திசை தொழுதனிர் செல்மின்'**

என்று பரிபாடல் சுட்டுகின்றது.

யமுனை ஆற்றில் ஆயர் மகளிரொடு கண்ணன் விளையாடியதற்கு அகநானூற்றுப் பாடலே இந்திய இலக்கியத்தில் தொன்மையான சான்று என்பர் ஆய்வாளர். அவுணர் ஞாயிற்றைக் கொண்டு போய் மறைத்து வைத்தனர், உலகில் இருள் சூழ்ந்தது. அஞ்சன உருவன் (மாயோன்) ஞாயிற்றை மீட்டுக் கொணர்ந்து ஆகாயத்தில் நிறுத்தி உலகத்தவர் துன்பத்தைப் போக்கினான் என்ற புறநானூற்றுச் செய்தி வடமொழியில் யாண்டும் இல்லாத ஒன்று.

தமிழரின் பண்டைய வழிபாடு இயற்கை வழிபாடாகும். மரங்கள், ஐம்பெரும்பூதங்கள், விலங்குகள், நாகங்கள் முதலியனவற்றை வழிபட்ட முறை இலக்கியங்களிலும் இன்றைய முறையிலும் உண்டு. இவ்வழிபாடுகள் எல்லாம் தாய் மொழியான தமிழிலேயே செய்யப்பெற்றன. நடுவில் பூசாரி, குருக்கள் முதலியோர் இல்லை. மக்களே நேரில் வழிபட்டனர். தமிழகக்கோவில்களில் அகத்தியர் முதலியவர் வழிபட்ட கோவில்கள் உண்டு. எறும்பு முதலாக யானை ஈறாக உள்ள உயிரினங்கள் வழிபட்ட கோவில்களும் உண்டு. இன்றும் இந்தியாவில் உள்ள பன்னிரண்டு சோதிலிங்கங்களில் தமிழ் நாட்டில் உள்ள இராமேசுவரம் தவிர ஏனைய சோதிலிங்கங்களை நாமே நேரில் சென்று தொட்டு நமக்குத் தெரிந்த மொழியிலேயே வழிபடலாம்.

வழிபாட்டிற்கு மிகவும் இன்றியமையாதது மந்திரமாகும். மக்களில் மகளிரால் பழங்காலத்தில் தம் தம் உலக தாய்மொழியிலேயே மந்திரங்கள் கூறப்பெற்றன. மகளிர்களே அதிகம் மந்திர ஆற்றல் பெற்றிருந்தனர். இன்றும் பழங்குடிகளிடம் இத்தகு மரபு உண்டு என்பார் கலாநிதி க. கைலாசபதி அவர்கள். தமிழ் மக்கள் வழிபாட்டு மந்திரம் பற்றித் தொல்காப்பியம்,



முனைவர்.
ந. இரா சென்னியப்பன்
மணிவாசகர்
அருட்பணி மன்றம்

**"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த**
**மறைமொழிதானே மந்திரம் என்ப"**

என்று குறிப்பிடுகின்றது. மந்திரம் தமிழ்ச் சொல். **'மந்த்ரம்'** வடசொல். இரண்டிற்கும் வேறுபாடு உண்டு.

மந்த்ரம் என்ற வடமொழிச் சொல்லிற்கு நினைப்பவரைக் காப்பாற்றுவது என்பது பொருள். அதாவது மந்திரத்தை உச்சாடனம் செய்தவர் அதை வேண்டுங்கால் பயன்படுத்தும் போது அது அவரைக் காப்பாற்றும். எனவே, இங்கே வடமொழி மந்த்ரம் எஜமானன், சொல்லுபவன் அதன் அடிமை.

ஆனால், தமிழில் கூறப்படும் **மந்திரம்** என்ற சொல் வடமொழியில் கூறப்படும் மந்த்ரம் என்ற சொல்லின் வேறானது. மந்த்ரம் என்ற வடமொழிச் சொல்லின் தற்சமம் அல்லது தமிழ் ஆக்கம் அல்ல தமிழ் மந்திரம். நிறைமொழி மாந்தர் சொல்லே மந்திரம், அவர் சொல்லே ஆணை. அச்சொற்கள் சொன்னவற்றைப் பயந்துவிடும்.

எனவே, மேற்கூறிய தொல்காப்பியச் சூத்திரத்திற்கு உரை வரைந்த பேராசிரியர் 'நிறைமொழி மாந்தர்' என்பது சொல்லிய சொல்லின் பொருண்மை யாண்டும் குறைவின்றிப் பயக்கச் சொல்லும் ஆற்றலுடையார் என்று விரித்துரைத்தார். நிறைமொழி உடைய அருளாளர்களை மாந்தர் என்ற சொல்லால் குறித்தார் தொல்காப்பியர். சாதாரண மானிடன் இறை இன்ப அனுபவம் பெற்று அதில் திளைத்து மாந்தும் போது மாந்தன் ஆகின்றான் ஆக, இறையின்ப அனுபவத்தில் மாந்திய மாந்தர்கள் உரைத்த நிறைமொழி மந்திரம் எனப் பெயர் பெற்றது என்பார் ஆய்வாளர் சத்தியவேல் முருகனார். பேராசிரியர் தொல்காப்பிய உரையிலே தமிழ் மந்திரம் என்று சுட்டுவார்.

பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் ஆகியன யாப்பின் வகை என்பார் தொல்காப்பியர். இவற்றுள் வாய்மொழி என்பதனை உரையாசிரியர்கள் அனைவரும் மந்திரம் என்றே குறிப்பிடுவர். உளங்கூர் கேள்வி இளம்பூரணர் என்ற உரையாசிரியர், 'வாய்மொழி எனினும் மந்திரம் எனினும் ஒக்கும்' என்பார். அனுபவம் மிக்க சான்றோர் அருளிக் கூறிய வாய்மொழி அனைத்தும் மந்திரமே.

**'கண்ட பெருமந்திரமே மூவர் பாடல்**
**கைகாணா மந்திரம் கண்ணுதலோன் கூறல்'**

என்று உமாபதி சிவாச்சாரியார் தேவார மூவர் வாக்குகளை மந்திரம் என்று பாராட்டிப் போற்றியுள்ளார்.

'திருவாசகம் தமிழ் மக்களின் வேதம்' என்பார் ஜி.யு. போப். எனவே திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், ஆலால சுந்தரர் முதலியோர் வாக்குகள் மந்திரங்களே. அவை பற்பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளன.

**வேள்வி தொடரும்...**

**திருச்சிற்றம்பலம்**

# சைவத்தை அறிமின் சிவத்தை அறிமின்

**மேற் கூறியவற்றால் ஆன்மா பந்த நிலையிலிருந்து முத்தி அல்லது வீடு அடையும் வரையுள்ள ஆன்ம வளர்ச்சி விளக்கப்பட்டுள்ளது. முத்தியிலும் வெவ்வேறு நிலைகள் உள்ளனவா?**

நான்கு வகை முத்தி நிலைகள் கூறப்படுகின்றன. இவை பதமுத்தி, அபரமுத்தி, பரமுத்தி, சீவன் முத்தி என்பவையாகும். இவற்றில் ஆன்மா பெறும் அனுபவ நிலைகளும் நான்காகக் கூறப்படுகின்றன. சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்பன இவைகள்.

**சாலோகம் முதலிய நிலைகளை விளக்குக.**

சிவலோகத்தில் நின்று அங்குள்ள போகங்களை அனுபவிக்கும் உயிர்களின் முத்தி நிலை ‘சாலோகம் எனப்படும். இவர்கள் சரியை நெறியில் ஒழுகி உயர்ந்தவர்கள்.

இப்போகங்களை அனுபவிப்பதோடு சிவபெருமானுக்கு அருகில் (சமீபத்தில்) இருக்கும் பேறு பெற்றவரின் முத்தி நிலை சாமீபம் எனப்படும். இவர்கள் கிரியை நெறியில் ஒழுகி உயர்ந்தவர்கள்.

சிவபெருமானின் திருவடிவம் (உருவம்) ஒன்றைப் பெற்று நிற்கும் உயிர்களின் முத்தி நிலை சாரூபம். இவர்கள் யோக நெறியில் ஒழுகி உயர்ந்தவர்கள்.

சிவபுரத்திலுள்ள சிவபெருமானின் திருவடிக் கீழ் இருந்து என்றும் சிவானந்தத்தை அனுபவிக்கும் பேறு பெற்ற உயிர்களின் முத்தி நிலை சாயுச்சியம் எனப்படும். ஆணவப் பற்று முற்றாகிய நீங்கிய நிலையில் உள்ளவர்கள் இவர்கள். இவர்கள் ஞானநெறியில் ஒழுகி உயர்ந்தவர்கள்

**பதமுத்தி முதலியவற்றை விளக்குக.**

சாலோகம், சாமீபம், சாரூபம் ஆகிய நிலையில் உள்ளவர் பதமுத்தி அடைந்தவர். இவர்கள் மல வாசனை நீங்கப் பெறாதவர்கள். இதனால் இவர்கள் மீண்டும் பிறவி எடுக்க நேரிடலாம்.

பதமுத்தியில் இருந்து பரமுத்திக்குச் செல்லும் நிலையில் உள்ளவர் அபரமுத்தி அடைந்தவர். இவர்கள் மீண்டும் பிறவி எடுப்பது அரிது.

சாயுச்சிய நிலையில் உள்ளவர்கள் பரமுத்தி அடைந்தவர். இவர்களுக்குப் பிறவி இல்லை.

பதமுத்தி நிலையில் இருந்து உலகில் தோன்றிய அருளாளரின் நிலை சீவன் முத்தி நிலை. இவர்கள் இறையருளால் பிறவி எடுத்தவர்கள். இவர்கள் தன் செயலின்றி சிவன் செயலாகக் கடமையிலீடு படுபவர்கள். உடம்போடு ஒட்டாதிருப்பது இவர்கள் நிலை.

**மேற்கூறியவற்றால் பந்தம் அகன்று முத்தி வரையுள்ள ஆன்மாவின் நிலை விளக்கப்பட்டது. மலபந்தத்திலிருந்து விடுபடுவதுதான் முடிவானதா?**


சமயங்கள் பொதுவாக வீடு அல்லது முத்தியையே முடிந்த நிலையாகக் கொள்கின்றன. பாசத்திலிருந்து விடுதலை அடைந்தபின் ஆன்மா அடையும் பயன் என்ன? என்ற கேள்வி எழுகிறது. முக்திக்குப் பின் உயிர் சிவானந்தத்தில் திளைத்து நித்திய பேரின்பத்தை அனுபவிக்கும் என்று சைவம் கூறுகிறது. வீடு அடைந்தபின் உயிர் பெறும் பேறு இது. இதுவே முடிந்த நிலை. வீடுபேறு என்ற தமிழ்ச் சொற்றொடர் இதனைக் குறிப்பதாக உள்ளது.

## திருவைந்தெழுத்து

**திருவைந்தெழுத்து என்பதன் பொருள் என்ன?**

திருவைந்தெழுத்து என்பது ந, ம, சி, வ, ய என்ற ஐந்து எழுத்துக்களாலான மந்திரம். வடமொழியில் இது பஞ்சாட்சரம் எனப்படும். பஞ்சாட்சரம் ஸ்ரீ பஞ்ச அட்சரம் ஸ்ரீ ஐந்து எழுத்து. திருமுறைகளில் இம்மந்திரம் ஐந்தெழுத்து, அஞ்சுபதம் போன்ற பெயர்களால் குறிக்கப்படுகின்றன.

நமசிவய என்பது தூல பஞ்சாட்சரம் என்றும் சிவயநம என்பது சூக்கும பஞ்சாட்சரம் என்றும் கூறப்படுகின்றன. இவற்றை உச்சரிக்கும் போது நமச்சிவாய, சிவாயநம என்று வருகின்றன. இவை தவிர அதிசூக்கும பஞ்சாட்சம், காரண பஞ்சாட்சரம், மகாகாரண பஞ்சாட்சரம் என்றும் மந்திரங்கள் உள்ளன. இவை ஒன்றை விட ஒன்று நுண்மை யானவை. சூக்குமம் நுண்மையானது தூலம் பருமையானது.



**‘மந்திரமாவது நீறு’ என்பது சம்பந்தபெருமானின் அருள் வாக்கு. திருநீறு எப்படி மந்திரமாக அமையும்?**

மந்திரம் என்பதற்கு நினைப்பவரை (அல்லது சொல்பவரைக் காப்பது என்பது பொருள். திருவைந் தெழுத்து ஓதுபவரைக் காக்கும் என்பதால் மந்திர மாகிறது. (மந் - நினை் த்ர-காப்பாற்று). எது எமக் குக் காவலாக உள்ளதோ அது மந்திரமாகிறது.

திருநீற்றை அணியும் போது ‘சிவ சிவ’ என்று சொல்லி அணியவேண்டும். இப்படி அணிவது சைவ மரபாக உள்ளது. இவ்வாறு திருநீற்றைப் பூசும்பொழுது மந்திரமாகிறது. சிவசிவ என்பது காரணபஞ்சாட்சரம். இது சிவயநம என்னும் சூக்கும பஞ்சாட்சரத்திலும் பார்க்க நுண்மையானது.

**நமச்சிவாய என்பது சிவனின் திருநாமமாகவும் இருக்கிறதல்லவா?**

ஆம். “நாதன் நாமம் நமச்சிவாயவே” என்ற தேவாரத் தொடர் இதனை விளக்குகிறது. ‘நமசிவாய’ வில் ‘ச்’ சேர்த்தால் சிவன் பெயராகிறது. இதனைச் சிவன் நாமமாக ஓதினாலும் மந்திரமாக ஓதினாலும் ஓதுபவர் அதிக பலன் பெறுவர்.

**திருவைந்தெழுத்துக் குறித்த சைவசித்தாந்த விளக்கம் என்ன?**

நமசிவய என்ற மந்திரத்தில் ‘ந’ திரோதானத்தையும், ‘ம’ மலத்தையும், ‘சி’ சிவனையும், ‘வ’ அருளையும், ‘ய’ உயிரையும் குறிக்கின்றன. இதில் ‘ய’ குறிக்கும் உயிர் பின்னிற்க, உயிரைப் பற்றிய மலம் (திரோ தானமும் ஆணவமலமும்) முன்னிற்கின்றன. சிவயநம என்ற மந்திரத்தில் சிவனும் அருளும் முன்னிற்க, மலம் பின்னிற்க, உயிர் நடுவில் உள்ளது. எனவே சிவயநம என்று ஓதும்பொழுது இறையருள் எம்மை முன்னின்று வழிநடத்துகிறது. நமசிவய என்று ஓதும் பொழுது மலமும் இறையருளும் வழி நடத்துகின்றன.

**தூல பஞ்சாட்சரம் உலகியல் நாட்டமுடையவருக்கு என்றும் சூக்கும பஞ்சாட்சரம் இறையருள் நாட்டம் உடையவருக்கு என்றும் கூறப்படுகின்றன. இது குறித்த விளக்கமென்ன?**

உலகியல் நாட்டம் உடையவர் தூல பஞ்சாட்ச ரத்தை ஓதுவது நல்லது, இறையருளை விழைபவர் சூக்கும பஞ்சாட்சரத்தை ஓதுவது நல்லது என்று சில நூல்களிலும் கூறப்பட்டுள்ளன. தூல பஞ்சாட் சரத்தை ஓதுவதால் உலகியல் நாட்டம் குறைந்து இறையருள் நாட்டம் பிறக்கும். சூக்கும பஞ்சாட்சரம் இறையருளுக்கு உயிரைச் செலுத்தும்.

**பிரணவ மந்திரமும் திருவைந்தெழுத்து மந்திரமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதென்று கூறப் படுகிறது. இத்தொடர்பு எத்தகையது?**

ஓம் என்பது பிரணவ மந்திரம். ஓங்காரம் என்றும் இது கூறப்படுகிறது. அ, உ, ம் என்ற மூன்றெழுத் துக்களை உள்ளடக்கியது இது. அ என்பது சிவனை யும் உ என்பது உயிரையும் ம் என்பது மலத்தையும் குறிக்கின்றன என்பது பொதுவான கருத்து.

சிவனிற் பிரிவில்லாதது அவனின் அருளாகிய சக்தி. இதனால் பிரணவத்திலுள்ள ‘அ’ சிவனையும் அவனின் அருளையும் குறிப்பதாய் அமைகிறது. இதனால் பஞ்சாட்சரத்திலுள்ள ‘சிவ’ என்ற பதம் ‘அ’ வின் விரிவாக இருக்கிறது. பிரணவத்தின் ‘உ’ வும் பஞ்சாட்சரத்தின் ‘ய’வும் உயிரைக் குறிக்கின்றன. பிரணவத்திலுள்ள ‘ம்’ என்பதிலுள்ள ‘ம’ மலத்தையும் அதன் மேலுள்ள புள்ளி திரோதானத்தையும் குறிப்பன என்பர். இதனால் பஞ்சாட்சரத்திலுள்ள ‘நம’ என்ற பதம் பிரணவ மந்திரத்தின் ‘ம்’ என்பதன் விரிவாக உள்ளது. எனவே பிரணவ மந்திரத்தின் விரிவே பஞ்சாட்சரம் என்பது பெறப்படுகிறது.

ஓம் என்ற மந்திரம் அ + உ + ம + விந்து (புள்ளி) + நாதம் என்ற ஐந்து கூறுகளின் சேர்க்கையாகவும் உள்ளது. இவையே பஞ்சாட்சரமாக விரியும் என்ற கருத்தும் உள்ளது. இந்த ஐந்து கூறுகளின் கூட்டாக அமைந்த ஓங்காரம் சமஷ்டிப் பிரணவம் எனப்படும். (சமஷ்டி -கூட்டு). அது விரியும் நிலையில் வியஷ்டிப் பிரணவம் எனப்படும். (வியஷ்டி - விரிதல்).

**திருச்சிற்றம்பலம்**

**மூலம் - சைவ சித்தாந்த வினாவிடை (கலாநிதி க.கணேசலிங்கம்)**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

# திருத்தொண்டு நெறிவாழ உதித்த ஞானத்தவ முனிவர் திருநாவுக்கரசர்

**"திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்"**



**திருக்காளத்தியில் கண்ணப்ப நாயனாரின் அற்புத அருட்காட்சி**

அப்பர் பெருமான் திருக்காஞ்சியிலுள்ள ஏகம்பரை வணங்கிப் போற்றி, பிறைச்சந்திரனை அணிந்த இறைவர் நிலைபெற எழுந்தருளியுள்ள மற்றப் பதிகளுக்கும் சென்று தொழுது வணங்க எண்ணி திருக்கழுக்குன்றத்தின் அருகே சேர்ந்தார். நாவரசர் கழுக்குன்றத்தில் வீற்றிருக்கும் கூத்தப் பெருமானின் திருவடிகளை வணங்கி, அருந்தமிழ் மாலையைப் பாடி, அருகிலுள்ள பல திருப்பதிகளுக்கும் சென்று, இறைவரை வணங்கிப் போற்றி, மேலும் சென்று, கடலால் சூழப்பட்ட திருவான்மியூர் என்னும் திருப்பதியைச் சேர்ந்தார்.

திருவான்மியூரில் வீற்றிருக்கும் மருந்தீசரைச் சேர்ந்து பணிந்து, வணங்கி பின் அதன் அருகிலுள்ள பிறவியை அறுத்து வீடு பேற்றை அருளுதற்குரிய இறைவரின் பல திருப்பதிகளையும் அடைந்து, வணங்கி, பின் நாவுக்கரசர் மணம் மயிலாப்பூரை வந்தடைந் தார். திருமயிலாப்பூரில் வீற்றிருக்கின்ற பெருமானின் திருவடிகளை வணங்கி, நாவரசர், அலைகள் தவழ்கின்ற கடற்கரை வழியே சென்று திருவொற்றியூரை அடைந்தார். திருவொற்றியூரில் வீதிகளை விளக்கி, நல்ல கொடிகளையும், மாலைகளையும், பாக்கும் வாழைகளுமான இவற்றையும் நிரல்பட நாட்டி, பொன்னால் ஆன நிறைகுடங்களையும், நறுமணப் புகை களையும், விளக்குகளையும் அழகுற அமைத்துத் தொண்டர்கள் நாவுக்கரசரை வரவேற்று நகரினுள்ளே அழைத்துச் சென்றனர்.

திருநாவுக்கரசரும் அந்தத் திருவொற்றியூரில் அமர்ந்தருளும் பெருமானின் கோபுரத்தை வணங்கி, உள்ளே புகுந்து, விழுந்து வணங்கியவாராய்,

**வண்டோங்கு செங்கமலங் கழுநீர் மல்கும்**
**மதமத்தஞ் சேர்சடைமேல் மதியஞ் சூடித்**
**திண்டோள்கள் ஆயிரமும் வீசி நின்று**
**திசைசேர நடமாடிச் சிவலோ கனார்**
**உண்டார்நஞ் சுலகுக்கோ ருறுதி வேண்டி**
**ஒற்றியூர் மேய வொளிவண் ணனார்**
**கண்டேன்நான் கனவகத்திற் கண்டேற் கென்றன்**
**கடும்பிணியுஞ் சுடுந்தொழிலுங் கைவிட் டவே**

எனும் திருப்பதிகத்தை அருளிச் செய்தார். இத்திருப்பதிகத்தில் அவர் சிவபெருமானின் சிறப்புகளை எடுத்துக் கூறி, **"அவரை அடியேன் கனவில் கண்டே னாக, அவ்வளவில் என் கடிய நோயும் அவை செய்த செயல்களும் நீங்கி விட்டன."** என்று போற்றி செல்கிறார். சிலகாலம் திருவொற்றியூரில் தங்கிய பின்னர் அங்கிருந்து நீங்கி, உமையை ஒரு கூற்றில் கொண்ட சிவ பெருமான் வீற்றிருக்கின்ற திருப்பாசூர் என்ற பதியை அடைந்தார்.

ஹதிருப்பாசூர்ஹ என்ற பதியை அடைந்து, அப்பதியில் மூங்கிலை இடனாகக் கொண்டு வெளிப்பட எழுந்தருளியிருப்பவரான இறைவரை, காலுற வணங்கித் தொழுது, **"முந்தி மூவெயில் எய்த முதல்வனார்"** எனத் தொடங்கி, உள்ளம் கரைந்துருகும் தன்மையுடைய திருக்குறுந்தொகைப் பதிகத்தையும், திருத்தாண்டகப் பதிகத்தையும், சந்தம் நிறைந்த திருநேரிசை முதலான தமிழ்ப் பதிகங்களையும் பாடி, நாவுக்கரசர், எம் இறைவரின் திருவருளைப் பெற்றவ ராய்ச் செல்கின்றார்.

பின்னர் அவ்வழகிய சிறந்த திருப்பதியை நீங்கி, நெறியில் வாழும் தூய குடிமையும் செம்மையும் உடையவர்களான வேளாளர்கள் வாழ்கின்ற பழையனூர்த் திருவாலங்காட்டை அடைந்தார். திருவாலங்காட்டின் இறைவன் திருவருளால் **"திருவாலங்காடு உறையும் செல்வர் தாமே"** என நிறைவுறும், என்றும் நீங்காத சிறப்பையுடைய பெருந்திருத் தாண்டகப் பதிகம் முதலாக ஓங்கும் பெருவாய்மைத் தமிழ் மாலைகள் பலவற்றையும் பாடி சிறப்பித்தார். இதனை பெருந்திருத்தாண்டகம் எனச் சேக்கிழார் குறிப்பது பெருஞ்சிறப்பாகும்.

திருவாலங்காட்டை நீங்கி வடதிசை நோக்கி சென்று, திருக்காளத்தி என்ற பெரிய மலையை அடைந்தார். நாவரசர் திருக்காளத்தித் தொடர் மலைகளின் தாழ்வரையில், தலையானது நிலம் பொருந்த வணங்கி எழுந்து, சிவபெருமான் நிலையாய் எழுந்தருளியிருக்கும் அம்மலையின் மீது ஏறி வலம் கொண்டு வணங்கிக் கொண்டு, திருக்காளத்தி மலையின் கொழுந்து போல்பவரை,

**விற்றூணொன் றில்லாத நல்கூர்ந் தான்காண்**
**வியன்கச்சிக் கம்பன்காண் பிச்சை யல்லால்**
**மற்றூணொன் றில்லாத மாசது ரன்காண்**
**மயானத்து மைந்தன்காண் மாசொன் றில்லாப்**
**பொற்றூண்காண் மாமணிநற் குன்றொப் பான்காண்**
**பொய்யாது பொழிலேழுந் தாங்கி நின்ற**
**கற்றூண்காண் காளத்தி காணப் பட்ட**
**கணநாதன் காண் அவனென் கண்ணு ளானே**

எனத் தொடங்கும் பதினோரு பாடல்களைக் கொண்ட நிறைவுடைய திருத்தாண்டகத்தைப் பாடியருளினார்.

மலையுச்சியில் எழுந்தருளிய இறைவரின் அருகில், பொருந்த முன்பு நிற்கும் வில் ஏந்திய கையையுடைய கண்ணப்ப நாயனார் திருவடிகளை அணைந்து, தலைமீது கூப்பிய கைகளுடன் வணங்கி வெளியே வந்து சேர்ந்தார்.

மேற்கூறியவாறு அப்பர் பெருமான் திருத்தாண் டகத்தில் (தி.6 ப.8), பதினொன்றாவது பாடலில் **"கண்ணாரக் காண்பார்க்கோர் காட்சியான் காண்"** எனக் கூறப் பெறும் அநுபவம் கண்ணப்பர் கண்ட அநுபவமாயிருத் தலும் அறியத்தக்கது.

அம்மலையில் திருத் தொண்டுகளைச் செய்து இறைவரை வழிபட்ட குறிப்பின் காரணமாக, எல்லோராலும் விரும்பத்தகும் திருக்கயிலையில் வீற்றிருந்தருளும் பெருமானார் திருக்கோலத்தைக் கண்டு மகிழ விரும்பி, அத்திருமலையின் மீது வீற்றிருக்கும் மருந்தான இறைவரை வணங்கி, அவருடைய நிறைந்த திருவருள் பெற்றமையால், பொங்கும் காதல் உடன் வடதிசை நோக்கிப் புறப்பட்டார்.

காழிப் பிள்ளையாருக்கும் சுந்தரருக்கும் இத்திருப் பதியே தம் செலவு நயப்பில் வடபுல எல்லையாயிற்று. நாவுக்கரசருக்கு இத் திருப்பதியிலிருந்து திருக்கயிலாயம் சென்று வணங்கும் விருப்பம் உளவாகத் திருக்கயிலைக் காட்சியைத் திருவையாற்றில் காணநேர்ந் தது. சுந்தரருக்குத் திருவருளால் வெள்ளை யானையின் மீது திருக் கயிலை செல்லவும், பெருமானை வணங்கித் மகிழவும் நேர்ந்தது.

**திருச்சிற்றம்பலம்**

**திருநாவுக்கரச நாயனார் புராணம் (329 - 347)**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**படம்-தேவராஜன் நடராஜன்** அவர்களின் முகநூலில் இருந்து

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு வேதநாயகி உடனுறை பால்வண்ணநாதர் திருக்கோயில் – திருக்கழிப்பாலை

## தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 4ஆவது திருக்கோயில் திருக்கழிப்பாலை






**"கனலா டலினாய் கழிப்பா லையுளாய்
உனவார் கழல்கை தொழுதுள் குதுமே."**

புனலாடிய புன்சடை உடையவனான எம்பெருமான், கபில முனிவரால் வெண்ணிற மண்ணில் செய்யப்பட்டு, பால்வண்ணநாதராக சிறப்பிக்கப் பட்டு, வேதநாயகி அம்மை உடனுறையாக எழுந்தருளியுள்ள திருத்தலமே திருக்கழிப்பாலை திருத்தலம்.

**அமைவிடம்: கடலூர் மாவட்டம், தமிழ்நாடு**

சிதம்பரத்திற்குத் தென்கிழக்கே சுமார் 10 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. இது சோழநாட்டு வடகரைத் தலங்களுள் நான்காவது. சிதம்பரத்திலிருந்து பேருந்துகள் உள்ளன.

**இறைவர் திருப்பெயர்: பால்வண்ணநாதர்.**
**இறைவியார் திருப்பெயர்: வேதநாயகி.**
**கோயில் மரம்: வில்வ மரம்.**
**தீர்த்தம்: கொள்ளிடம்**
**வழிபட்டோர்: சம்பந்தர், அப்பர், சுந்தரர், பரணதேவ நாயனார், சேக்கிழார், வால்மீகி முனிவர் முதலியோர்**
**பாமாலை: சம்பந்தர், அப்பர், சுந்தரர்.**

### திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்

### திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்

**புனலாடிய புன்சடையா யரணம்
அனலா கவிழித் தவனே யழகார்
கனலா டலினாய் கழிப்பா லையுளாய்
உனவார் கழல்கை தொழுதுள் குதுமே.** (2-21-1)

### திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகம்

**வனபவள வாய்திறந்து வானவர்க்குந் தானவனே யென்கின் றாளாற்
சினபவளத் திண்டோண்மேற் சேர்ந்திலங்கு வெண்ணீற்ற னென்கின் றாளால்
அனபவள மேகலையொ டப்பாலைக் கப்பாலா னென்கின் றாளால்
கனபவளஞ் சிந்துங் கழிப்பாலைச் சேர்வானைக் கண்டாள் கொல்லோ**
(4-6-1)

### சுந்தரர் அருளிய திருப்பதிகம்

**செடியேன் தீவினையில் தடு
மாறக் கண்டாலும்
அடியான் ஆவஎனா தொழி
தல்த கவாமே
முடிமேல் மாமதியும் அர
வும்மு டன்துயிலும்
வடிவே தாம் உடையார் மகி
ழுங்கழிப் பாலையதே**

### திருத்தலச் சிறப்பு

இது முன்பு கொள்ளிடப் பேராற்றின் வடகரையில் காரைமேடு என்னும் இடத்தில் இருந்தது. அங்கு இருந்தபொழுது கொள்ளிடத்தின் வெள்ளப்பெருக்கு, திருக்கோயிலை முற்றிலும் பாழ்படுத்திவிட்டது.

படுகை முதலியார் குடும்பத்தில் திரு. பழநியப்ப முதலியார் என்பவர் சிவபுரிக்குத் தெற்கில் கோயில்கட்டி அதில் கழிப்பாலை இறைவரையும், இறைவியாரையும், ஏனைய பரிவார தெய்வங்களையும் எழுந்தருளுவித்துள்ளார். இத்தலத்திற்கு ஞானசம்பந்தரது பதிகங்கள் இரண்டு, திருநாவுக்கரசரது பதிகங்கள் ஐந்து, சுந்தரரது பதிகம் ஒன்று ஆக எட்டுத் திருப்பதிகங்கள் இருக்கின்றன. இவற்றுள் திருநாவுக்கரசர் திருவாய் மலர்ந்துள்ள "வனபவள வாய்திறந்து" என்று தொடங்கும்



அகப்பொருள்துறைகள் அமைந்த பாடல்கள் படித்து இன்புறத்தக்கன.

குதிரையின் கால் பட்டு பிளந்தது போன்ற குறியுடைய வெண்ணிற இலிங்கத்திற்கு தான் இன்றும் பூசை நடக்கிறது. இலிங்கத்திற்கு பின்னால் அம்மையப்பர் திருமணக்கோலத்தில் உள்ளனர். கபிலமுனிவர் அவர்களால் நிலைப்படுத்தல் செய்யப்பட்ட இலிங்கம் மூலவராக உள்ளது.

இத்தலத்திலுள்ள பைரவர் சந்நிதியும் சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது. காசியில் உள்ளதைப் போல வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பைரவரை வணங்கினால் காசியிலுள்ள பைரவரை வணங்கிய பலன் கிட்டும் என்பது தொன்னம்பிக்கை. இப்பகுதியிலுள்ள மக்கள் இக்கோயிலை 'பைரவர் கோயில்' என்றே அழைக்கின்றனர்.

### திருத்தல வரலாறு

கபிலமுனிவர் ஒவ்வொரு சிவத்தலங்களாக வழிபட்டு வரும் போது, வில்வ வனமாக இருந்த இப்பகுதியில் தங்கி சிவபூசை செய்ய நினைத்தார். இப்பகுதியில் பசுக்கள் தானாக பால்சுரந்து வந்த காரணத்தினால் மணல் முழுவதும் வெண்ணிறமாக காட்சியளித்தது. முனிவர் இந்த வெண்ணிற மணலை எடுத்து இலிங்கம் அமைத்து வழிபாடு செய்தார். ஒருமுறை அந்த வழியாக வந்த மன்னனது குதிரையின் கால், மணல் இலிங்கத்தின்மீது பட்டு இலிங்கம் பிளந்து விடுகிறது.

வருந்திய முனிவர் பிளவுபட்ட இலிங்கத்தை எடுத்துவிட்டு வேறு லிங்கம் திருநிலைப்படுத்தல் செய்ய நினைத்த போது, இறைவன் அம்மையப்பராய் காட்சி தந்து, **"முனிவரே! பசுவின் பால் கலந்த வெண்ணிற மணலில் செய்த இலிங்கம் பிளவு பட்டிருந்தாலும் அதை அப்படியே திருநிலைப்படுத்தல் செய்து விடுங்கள். காமதேனுவே பசுவடிவில் இங்கு வந்து பால்சொறிந்துள்ளது. எனவே இந்த இலிங்கத்தை வழிபடுபவர்கள் சகல செல்வங்களும் அடைவார்கள்"** என்றார் இறைவன். இன்றும் கூட இக்கோயிலின் இலிங்கம் வெண்ணிறமாகவே உள்ளது என்பது சிறப்பம்சமாகும்.

### திருக்கோயில் அமைப்பு

மூன்று நிலை இராசகோபுரத்துடன் இக்கோயில் காட்சி அளிக்கிறது. வாயிலின் இருபுறங்களிலும் அதிகார நந்தியர் துணைவியருடன் காட்சி தருகின்றனர். கொடிமரம் ஏதுமில்லை. வீதியில் சூரியன், விநாயகர், சிவவேடன் (கிராதமூர்த்தி), திருமால், சுப்பிரமணியர், திருமகள், ஒன்பான்கோள்கள் (நவக்கிரகம்), காலபைரவர், சந்திரன் சந்நிதிகள் உள்ளன.

உள்வீதி நுழைவு வாசலின் இருபுறமும் அதிகார நந்தியர் தமது துணைவியருடன் உள்ளனர். உள் மண்டபத்துள் சென்றால் வாயிற்காவலர்களை வணங்கலாம் . மண்டபத்தின் வலதுபுறம் தெற்கு நோக்கிய அம்பாள் சந்நிதி உள்ளது. நடராசசபையில் சிவகாமி அம்மையின் திருமேனி தன் தோழியர் இருவர் சூழ ஒரே பீடத்தில் காட்சி தருகிறாள். வாயில் விநாயகரை, தண்டபாணியைத் தொழுது உட்சென்றால் மூலவர் அருட்காட்சி.

கபில முனிவர் அவர்களால் திருநிலைப்படுத்தல் செய்யப்பட்ட இலிங்கம் பெயருக்கேற்ப வெண்ணிறமாக சுயம்பு மூர்த்தியாக மிகச் சிறிய பாணத்துடன் காட்சியளிக்கிறது. மேற்புறம் சதுரமாக, வழித்தெடுத்தாற்போல் நடுவில் பள்ளத்துடன் அதிசயமான அமைப்புடன் இலிங்கத் திருமேனி காட்சி தருகின்றது. திருமஞ்சனத்தின் போது பால் மட்டும்தான் இப்பள்ளத்தில் தேங்கும். மற்ற திருமஞ்சனங்கள் அனைத்தும் ஆவுடையாருக்குத்தான் நடைபெறுகிறது.

திருச்சிற்றம்பலம்

சிவத்திரு. தென்னாடு நிலவன்

# சிவபூமியில் சிவனைத் தேடி

## 2000ம் ஆண்டுகள் பழமை வாய்ந்த, இராவணன் வழிபட்ட உகந்தை மலை சிவன் கோயில்



ஈழத்துத் திருநாடானது சைவ சமயத்தைப் பழமையாகக் கொண்டது. தொன்மைக் காலத்தில் சிவநாமத்துடன் சிறப்புப் பெற்றிருந்த பல இடங்கள் தற்பொழுது விநாயகர், முருக வழிபாட்டுத் தலங்களாக விளங்குகின்றன. அந்தவகையில் புராண இதிகாச மரபு வரலாற்றுக் கதைகளில் உகந்தை மலை, சிவனுக்குரிய வழிபாட்டு இடமாக மிளிர்ந்தது. தற்போது கந்தனுக்கு உகந்த வழிபாட்டு மலையாகப் பேசப்பட்டு வருவதைக் கண்டு கொள்ள முடிகின்றது.

### திருத்தல அமைவிடம்

உகந்தை மலை அம்பாறை மாவட்டத்தில் பாணமை எனும் இடத்திலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் காட்டுப்பாதையில் அண்ணளவாக 12 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. இவ்விடம், அடர்ந்த காடு, உயரமான மலைகள், கடல் ஆகியன இயைந்த பகுதியாகும். இங்குள்ள உயரமான மலைக்குன்றின் மேலே தான் புராதனமான சிவாலயம் இருந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. தற்போது இவ்விடம் முருகனை வழிபடும் இடமாகப் புகழ் பெற்றிருக்கின்றது. கதிர்காமத்திற்கு பாத யாத்திரை செல்லும் அடியார்கள் தங்கி இளைப்பாறிச் செல்லும் இடமாகவும் விளங்குகின்றது.

### திருத்தல வரலாறு

ஈழத்தின் வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களில் சிவ வழிபாடு நிலவியுள்ளமைக்குச் சான்றாக உகந்தை மலைக் கோயில் காணப்படுகின்றது. புராண மரபுக் கதைப்படி முருகன் சூரபத்மனை அழிப்பதற்கு உகந்தை மலையில் படை வீடு கட்டி போர் புரிந்தார். இதனால் முருகனுக்கு உகந்த மலை 'உகந்தை' ஆயிற்று என்பர். மற்றுமோர் புராண மரபுக் கதைப்படி, முருகனுக்கும் சூரனுக்குமிடையே நடந்த போரில் முருகனது படையாயுதமான வேல் சூரனின் மார்பைப் பிளந்து வரும் வழியில் எதிர்ப்பட்ட வாகூர மலையைப் பிளந்து கடலில் வீழ்ந்த பின் வேல் கொண்ட மூன்று கதிர்களைச் சிந்திய தென்றும், அவற்றில் ஒன்று உகந்தை மலையில் பதிந்த தென்றும் கூறப்படுகின்றது. பின்னாளில் இம் மலையில் வேல் வழிபாடு உருவாகி இத்தலம் முருக வழிபாட்டிற்கு உகந்த தலமாக பத்தர்களால் நம்பிக்கை கொள்ளப்பட்டது என்பர்.

வான்மீகி இராமாயணத்தில் இராவணன் சிறந்த சிவபத்தன் என்றும் இலங்காபுரியைத் தலை நகராகக் கொண்டு இலங்கைத் தீவை ஆட்சி புரிந்தான். அவன் சிவனுக்குப் பல கோயில்களை எழுப்பி, சிவலிங்கத் திருநிலைப்படுத்தல் செய்து, புண்ணிய தீர்த்தக் குளத்தையும் உருவாக்கிக் கொடுத்தான் என்று கூறுகின்றது. இவ்வாறு உகந்தை மலையிலும் இராவணனால் சிவாலயம் ஒன்று உருவாக்கப்பட்டு வழிபாடு செய்தான் என்று இங்கு நிலவும் பழமரபுக் கதையும் கூறுகின்றது, மற்றும் இராவணனின் சகோதர குபேரன், நாகர் குடிகளை தன்னாட்சியின் கீழ் வைத்திருந்து, சிவவழிபாடு, வேல் வழிபாடு சிறக்க ஆட்சி புரிந்தான் என்று கூறப்படுகிறது, இங்கு வாழ்ந்த நாகர் சிவ வழிபாட்டுக்குரியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### மட்டக்களப்பு மான்மியத் தகவல்

கிழக்கிலங்கையில் பழமை வரலாற்றுத் தகவல்களை வழங்கும் முக்கியம் வாய்ந்த ஆவணங்களில் மட்டக்களப்பு மான்மியமும் ஒன்று, அதில் இராவணன் உருவாக்கிய சிவாலயம், அச்சிவாலயம் புதுப்பிக்கப்பட்ட செய்தியும், பூசை வழிபாடுகள் இடம் பெறுவதற்கு திடம் பண்ணிய செய்தியும், தானம் அளித்த செய்தியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உகந்தையின் வடக்கு, தெற்குப் பகுதிகளின் இராசதானியாக உன்னரசுகிரி அமைந்திருந்தது. இவ்விடத்தில் மகாசேன மன்னனும் ஆடகசவுந்தரி எனும் இளவரசியும் மணம் முடித்து ஆட்சி புரிந்து வரும் காலத்தில் அவர்கள் சிவநெறி தழுவி, சிவாலயங்களைக் கட்டியும், புதுப்பித்தும் பூசை வழிபாடுகளைப் புரிந்து வரும் காலத்தில் அவர்களுக்கு சிங்ககுமாரன் எனும் மகன் பிறந்து, தந்தைக்குப் பின் உன்னரசுகிரியின் மன்னனாகி, தனது பெற்றோர் வழியில் சிவநெறி தழுவி அரசாட்சி புரிந்தான். இவனுடைய காலத்தில் உகந்தை மலையில் இராவணன் அமைத்த சிவாலயம் மீண்டும் நிறுவப்பட்டது என்ற செய்தியை மட்டக்களப்பு





சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

மான்மியம் மேல்வருமாறு செப்புகின்றது.

"இராவணன் இங்கு சிவனுக்கு ஆலயமியற்றி வழிபட்டிருந்தான் என்றும், பின் கோயில் பாழடைந் திருக்கையில் உன்னரசுகிரியை யாண்ட சிங்ககுமாரன் தந்தையைப் போல் தானுமொரு சிவாலயமியற்ற விரும்பி உகந்தை மலையுச்சியில் வடநாட்டுச் சிற்பிகளை வருவித்து சிவாலயம், விஷ்ணுவாலயம் பிரமாவாலயம் இயற்றுவித்து, மலையடிவாரத்தின் எட்டுத் திக்கிலும் இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு குபேரன், ஈசானன் முதலானோருக்கும் ஆலயமும், செப்புக் கொடித்தம்பமும் எடுப்பித்து மலையுச்சியில் ஒரு தங்கக் கொடித்தம்பமும் நிறுத்தினான். பின் நெல் வயல்கள் திருத்தி, குமுகன் வாய்க்காலிலிருந்து மூன்று ஏரிகளில் நீரைத் தேக்கிப் பயிர் செய்த நெல் வருவாயில் உகந்தை நித்திய திருப்பணிக்கென ஐந்நூறு அவண நெல்லும், அந்தனர் முதலான ஊழியர்களுக்கு இரு நூறு அவண நெல்லும் வழங்க ஏற்பாடுகள் செய்தான் அதனோடு ஆடித்திங்கள், அமாவாசை ஆகிய இரு தினங்களிலும் இராவணேசுவரருக்குத் தீபமேற்ற வகுத்து, புவனத் திருப்பணி அதிகாரரே (கலிங்குகுல அரசர்கள்) இக் கோயிற் கடமைக்காரர் என்பதனையும் வகுத்திருந்தான்"

மான்மிய வரலாற்றுப்படி உன்னரசு கிரியை ஆட்சி புரிந்த சிங்ககுமாரன் காலம் கலியுக ஆண்டு 3337 ஆகையால் இவனால் புதுப்பிக்கப்பட்ட சிவாலயம் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கொள்வதற்கு இடமுண்டு.




தற்போது இச் சிவாலயத்தை, அங்கு காண முடியாதுள்ளது. சைவசமய நெறியும் அத பண்பாடும் தழைத்தோங்கிய உகந்தை மலையில் சைவசமயம் மறைந்தமைக்கு காரணம் என்ன? என்று எமது மனதில் ஐயம் எழாமலும் இல்லை. இதற்குத் தகுந்த ஆதாரங்களும் இல்லை. எனினும் தினசிங்கன் எனும் சிங்கர் மரபுவந்த ஒருவனால் சிவாலயங்கள் இடிக்கப்பட்டு அங்குள்ள செல்வங்களையெல்லாம் சோழ நாட்டிற்கு அனுப்பி வைத்ததாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. இதனால் அவனுடைய காலத்தில் இச் சிவாலயம் அழிக்கப்பட்டிருக்கலாம் என அனுமானிக்க முடிகின்றது.

கந்தபுராணம், வான்மீகி இராமாயணம் ஆகிய புராதன புராண இதிகாச இலக்கியங்களில் குறிப்பிடப்படும் உகந்தை மலைச் சிவாலயம் பற்றி, மட்டக்களப்பு மான்மியத்தில் ஒரு தலவரலாற்றுக் கதை போல் புனையப்பட்ட வரலாற்றுச் செய்தியையும் தருகின்றது. இருப்பினும் சிவனின் இருப்பிடமாக இருந்த உகந்தை மலை தற்போது அவரின் குமாரராகிய குமரக்கடவுளின் இல்லிடமாக விளங்கி சிவகுகனருள்மிக்க இடமாகத் திகழ்கின்றது.

திருச்சிற்றம்பலம்

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org



**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org

# Appar Swamikal Kurupoosai – Chithirai Sathayam (3rd May)

Appar Swamikal, also known as Thirunavukkarasar, was a prominent saint and poet in Tamil Nadu during the 7th century. He is considered one of the most revered Nayanars, who were a group of sixty-three Saiva saints in the Saiva religion. His Kurupoosai (the day he united with Lord Siva) falls on the 3rd of May this year, which is a date obtained due to the Chithirai Sathayam star. As a result of this upcoming day, it is essential to understand and reflect on Appar Swamikal's significant influence in Tamil and Saiva culture. Resultantly, Appar Swamikal played an important role in the growth and maintenance of Saivam and greatly influenced the Tamil language and culture through his Thevarams (Hymns). Appar Swamikal composed a significant number of devotional hymns known as Thevarams. These hymns are an integral part of Tamil literature and are revered in Saivism, expressing profound devotion to Lord Siva.

Appar Swamikal, played an immense role in the preservation and revival of Saivam in a period also greatly influenced by Jainism. Appar Swamikal initially left his home, entered a Jain monastery, and was given the name Dharmasena. He dedicated time to studying Jainism and eventually rose to the position of head of the Jain monastery located in Thiruppathiruppuliyur. However, after an ailment, that Jain practices could not cure, he returned home on the request from his sister Thilakavathiyar, where he recited Om Nama Sivaya and wore Thiruneeru. This cured his sickness and influenced him to return to Saivam. Appar Swamikal's most significant contribution to Saivism lies in his composition of devotional hymns known as Thevarams. These hymns, filled with deep devotion and love for Lord Siva, form an integral part of Saivite worship and spiritual practice. Through his poetry, Appar Swamikal expressed profound reverence for Siva, narrated personal experiences of divine grace, and conveyed the essence of Paththi (devotion) as a path to spiritual enlightenment. The Thevarams, sung in temples and religious gatherings, continue to inspire and uplift devotees, reinforcing the central role of devotion in Saivism. Appar Swamikal's greatness through his devotional hymns greatly promoted the teachings of Saivam throughout the Tamil lands and continues to do so.

In addition, Appar Swamikal's Thevarams usage of the Tamil language significantly strengthened the importance of Tamil and had a lasting impact on Saivism and Tamil culture. By composing hymns and religious texts in Tamil, he made Saivism accessible to a wider audience, who were more familiar with the Tamil language. This effort not only contributed to the growth of Tamil literature but also strengthened the cultural identity of Tamil Nadu, reinforcing the close connection between language, culture, and spirituality.

In conclusion, Appar Swamikal Nayanmar was a great saint who should be praised and respected greatly for his immense contributions to the Tamil language and culture in addition to the Saiva religion, and as a result, we should remember his life on his Kurupoosai.

# Miracles of Saiva Saint Thirugnanasampanthar Swamikal



Siva P.Abiram SG

Thirugnanasampanthar was a Saiva poet/saint, who lived in the seventh century CE.He is one of the most prominent saints amongst the 63 Nayanars. Sampathar's entire collection of hymns about Lord Sivan is called "Thirukkadaikappu''. These were later collected to form the first three volumes of the Thirumuraikal – one of the principle texts for Saiva Sithantham philosophy.

Sampanthar once visited Thiruvothur Temple. Thiruvothur temple is unique to other temples as its Nandi is facing towards the entrance rather than facing the Sivalingam. Thiruvothur is situated at a distance of about 30 kms from Kanchipuram.It is believed that this temple was constructed during 6th century CE. On the left side of the entrance, there is a huge palmyra tree made of stone - half of it depicts a male palmyra tree and the other half depicts a female palmyra tree. Sivan can be seen seated under this tree, and Sampanthar can also be seen at his side.



It was here a devotee who was looking after this temple, had grown palm trees on the banks of the river Cheyyar and around the temple's fields to protect the temple's walls from erosion and floods. However, all of these palm trees were male and did not yield any fruits. The Jains laughed at him and started taunting him by saying "why don't you ask Sivan to change these male palm trees into female, fruit bearing ones?"

Sampanthar prayed to Sivan and sang the hymn that goes as follows:

**பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி**
**ஏத்தா தாரில்லை எண்ணுங்கால்**
**ஓத்தூர் மேய ஓளிமழு வாளங்கைக்**
**கூத்தீ ரும்ம குணங்களே.**

Puuththern thaayana kondunin ponnadi
Aeththaa thaarillai yennungkaal
Oththour maeya olimalu vaalangkaik
Kuuththee rumma kunangkalay.

In English this translates to, Dancing Sivan who holds a bright weapon of a battle-axe and who dwells in Thiruvothur! If we consider, there is no one who does not praise your qualities and worship your golden feet selecting and fitting flawless flowers and other materials for worship.

By the next day all of the male palmyra trees had yielded palmyra fruits. Some of these Palmyra trees can still be seen today.

After seeing this miracle, the Jains who were ridiculing the Saiva disciple became Saivites.

To be continued...

# An Outline of Saivism - Origin and Development

Saivam, or Saivism as called by the English educated, considers Sivan as its primary God. It is an ancient religion not founded by any prophet or saint.

Saivam as practiced today can be divided into three sectarian religions. They are Kashmir Saivam in the North, Vira Saivam in the middle and Saiva Siththantham(Siddhanta Saivam) (locally referred to as Saivam) in the South of India. With minor differences in their philosophies and practices, the basic concepts remain the same in all these branches.

Saiva Siththantham (Siddhanta Saivam) is prevailing not only in South India, but also in Sri Lanka, Malaysia, Singapore and other countries where Tamils are living. The name Saivam or Saivism in this book will henceforth refer to Siththantham (Siddhanta) Saivam, which is the dominant religion of the Tamils. The philosophy of this religion is Saiva Siththantham (Siddhanta).

## Origin of Saivism

Origin of Saivism dates back to the prehistoric period. For a long time it was thought that Saivism developed during the Vedic period. The Mohenjo Daro-Harappa excavation of the twentieth century gives clear indication of Sivan worship and Saiva religion in existence before the Vedic period. They also suggest the existence of a civilization which was not only pre-Aryan, but also of Dravidian origin. Following statement of the scholar Sir John Marshall acknowledges this view:

Among the many revelations that Mohenjadaro and Harappa have in store for us, none perhaps is more remarkable than this discovery that Saivism has a history going back to the chalcolithic age or perhaps even further still, and that it takes place on the most ancient living faith in the world.

Another Western scholar G.U.Pope in his work Thiruvasagam writes as follows; Saivism is the oldest prehistoric religion of South India, essentially existing from pre-Aryan times.


Of the four Dravidian languages spoken now, Tamil is the oldest and richest language. The term Dravidian can, therefore, without any hesitation, be taken to mean Tamilian of South India.

## Vetham (Veda) and Akamam (Agama)

Vetham(Veda) and Akamam(Agama) are collections of works formed as independent classes of literature over centuries before the Christian era. It is generally believed that Vedic period started with the advent of Aryans to the North of India. Scholars defer in their opinion, giving Vedic period as 3000 B.C. to 1500 B.C. (P.T. Srinivasa Iyengar), 1200 B.C. to 600 B.C. (R.D. Banarji), etc.,.

Early Aryans feared natural calamities such as rain and thunder. They deified the related aspects of nature as Varuna, Indra etc., and prayed for safety. These prayers were in the form of appealing and making offerings to the deities. The related words and rituals formed the basis of early vedic literature.

The later Vedic thoughts are collectively called Upanishad. Because it formed at the end period (antha) of the Vetham(Veda), it is called Vethantham(Vedanta). The word Vetham(Veda) includes all Vedic thoughts including Vethantham(Vedanta). Unlike in the earlier works, philosophical thoughts are seen more in the Vethantham(Vedanta).



Dr. K. Ganesalingam
Canberra - Australia

The period of Akamam(Agama) is also not clearly established. The antiquity of Akamam (Agama)s, according to scholars, dates back to Vetham (Veda)s or even before them. Vethantham(Vedanta) Sutram of Badarayana and Saitiparva of Makabaratham are early works which carry references to it.

Akamam(Agama) speaks of various aspects of religion, such as rituals, temple design, temple worship, etc., Each religion has its own Akamam(Agama). The Akamam(Agama) of the Saiva religion is called Saiva Akamam(Agama). Saivam has twenty eight primary Akamam(Agama)s and two hundred and seven subsidiary Akamam(Agama)s called Upa-Akamam(Agama)s. Most of these are not in existence now. Many Vedic views are inconsistent and contradictory, and not acceptable to Saiva forth. However Vetham(Veda) forms the earliest human thoughts where roots of many Indian religions, including Saivism, are seen.

Akamam(Agama) is relatively more precise and forms the bedrock of rituals and philosophy of Saivism. Because of this, Akamam(Agama) is held in high esteem and Vetham(Veda) is given a second place in Saiva religion. St. Thirumoolar, in his Thirumanthiram, says that Vetham (Veda) is of general significance and Akamam(Agama) is of special significance to Saivam. Saiva Siththantham (Siddhanta) philosophy is referred to as Akamam(Agama) nta (end or conclusion of Akamam(Agama)s)

## Saivism in Tamil Land

Tholkappiyam is the earliest work on Tamil grammar, available now. General opinion among scholars is that it belongs to the pre- Christian era. Some of the grammatical expressions and verbal usages such as uyir, mei, vinai etc, are identical with and expressive of those of the Saiva Siththantham (Siddhanta) philosophy. Unless the Saiva faith was in existence in Tamil land long before the period of Tholkappiam, such usage of words and identification with Saiva philosophical thoughts could not have been possible.

References to Saiva religion and its doctrine are found in the Sangam literature. The epics of Silappathikaram and Manimekalai, though propagating Jain and Buddhist faiths, speak of various aspects of Saivism. Manimekalai and Paripadal are early Tamil literature where Sivan is portrayed in His eight forms called Attamurtham.

The book Thirukkural is a great contribution of the Tamils to the world. Many of its couplets reflect Saiva doctrines and its philosophy. Contents and verbal usage of this book had gone into the later literary and religious works. Though Thirukkural reflects the views of various religions, all its views are not acceptable to this religion. In the case of Saiva religion, no view contrary to its concepts is found in Thirukkural.

## Saiva Renaissance

During the period from the third to sixth century, Tamil land was ruled by some invaders from the North of India, called Kalabrars whose culture, religion and language were alien to the Tamils.

Historical records relating to this period are not clear. Culture of the Tamils was disintegrating during this period. This was considered as the dark period in the history of the Tamils.

With the blessing of the rulers, the religion of Jainism was spreading fast. Tamil language and Saiva religion were going into oblivion. By divine grace> as if to arrest this declining trend, the Tamil land saw the advent of Saiva Saints called Nayanmars. They, by their intense devotion to Lord Sivan and their outpouring of devotional hymns in Tamil, restored the linguistic, religious and cultural heritage of the Tamils. They instilled courage and self respect in the Tamil minds. St.Thirugnanasampanthar called himself as Thamizh Ganansampanthar. *(தமிழ் ஞானசம்பந்தன்)* and his verse as Sampanthar Thamizh *(ஞானசம்பந்தன் தமிழ்)*. St.Thirunavukkarasar said “we are not a subject race to anyone” *(யாமார்க்கும் குடியல்லோம்)*. St.Manickavasagar said “I will not look up even to the ruler of the land” *(மண்ணாள்வான் மதித்துமிரேரன்)*. They showed that the spirit of Saivism is to show intense faith and devotion to Lord Sivan; the spirit of Saivite Tamils is to develop love of their language, religion and culture and to live with self- respect, courage, dignity and honour.

The four Saiva Nayanmars called Samaya Kuravar by their devotional hymns of Thevarams and Thiruvasagam did things impossible. They cured the incurable, gave life to the deceased and performed many miracles. They demonstrated the power of God’s name, Thiruneeru the sacred ash and Panchadcharam manthiram.

(See Page 14 )

# Maavittapuram Murugan Temple



Aran Sivasuthan
Grade 8
Sydney

Nestled within the serene landscapes of Sri Lanka's northern region, amidst swaying palms and whispering breezes, stands the magnificent Maavittapuram Murugan Temple—an architectural marvel and a spiritual beacon that transcends time, weaving together centuries of history, mythology, and devotion.

Legend has it that the roots of Maavittapuram Temple delve deep into the annals of Tamil mythology, tracing its genesis to the celestial battle between Lord Murugan and the formidable demon Soorapadman. It is said that in the aftermath of this epic confrontation, the victorious Lord Murugan sanctified the land upon which the temple now stands, blessing it with divine energy and eternal sanctity. Stepping through the ornate gopuram, adorned with intricate carvings that narrate tales of gods and goddesses, pilgrims are transported into a realm where the earthly and the divine converge. The temple's architecture, characterized by its towering spires and graceful arches, bears the hallmark of Dravidian craftsmanship—a testament to the artistic prowess and spiritual fervor of Tamil artisans.



Within the temple precincts, the air is heavy with the scent of jasmine and the melodious strains of devotional hymns. Pilgrims, clad in vibrant attire, ascend the sacred steps leading to the sanctum sanctorum, where the presiding deity, Lord Murugan, awaits in all his resplendent glory. Here, amidst flickering lamps and floral offerings, devotees offer prayers and seek blessings, their hearts brimming with faith and devotion. Throughout the year, Maavittapuram Temple pulsates with the rhythms of religious observances and cultural festivities, none more spectacular than the annual "Vel Vel " festival. This grand celebration, which commemorates Lord Murugan's triumph over evil, transforms the temple grounds into a kaleidoscope of colors and sounds—a symphony of faith and devotion that reverberates across the land. Yet, Maavittapuram Temple is not merely a place of worship; it is a custodian of Tamil culture and heritage—a living testament to the enduring legacy of a rich and vibrant tradition.

Beyond its religious significance, the temple serves as a cultural hub, hosting a myriad of educational programs, artistic performances, and community initiatives that celebrate the essence of Tamil identity and pride. As pilgrims and visitors traverse the hallowed grounds of Maavittapuram Murugan Temple, they embark on a journey of discovery—a journey that transcends the boundaries of time and space, weaving together the threads of faith, history, and culture. Here, amidst the echoes of ancient hymns and the whispers of sacred lore, they find solace for the soul and inspiration for the spirit—a testament to the enduring power of devotion and the eternal grace of the divine.

# An Outline of Saivism - Origin and Development

(Continued from page 13)

These Saiva Nayanmars, showed the path of devotion or Paththi (Bakthi) as an easy way for God realisation. They are the apostles of Saiva religion to be known and venerated by every Saivite.

### Saiva Philosophy

The philosophy of Saiva religion is Saiva Siththantham (Siddhanta). Siththantham (Siddhanta) means the ultimate truth. Elements of Siththantham (Siddhanta) philosophy are seen scattered in Vetham (Veda)s, particularly the Vethantham(Vedanta)s, Akamam(Agama) s, early Tamil works and devotional hymns of Nayanmars. Saint Meikandar of the 13th century codified these philosophical thoughts and brought out a brilliant exposition of Saiva Siththantham (Siddhanta) philosophy in his work Sivagnanapotham (Sivagnanabodham). This work is considered as the primary text of Saiva Siththantham (Siddhanta) philosophy.


Fourteen Saiva Siththantham (Siddhanta) Works including Sivagnanapotham(Sivagnana bodham), are called Meykanda Sathiram (Sastras) which are the authoritative books of Saiva Siththantham (Siddhanta) philosophy. Two of these works belong to the earlier period than that of Sivagnanapotham(Sivagnanabodham).

Saiva Siththantham (Siddhanta) posits three entities as eternal. They are Pathi or God, Pasu or Soul and Pasam or Bondage (materials of bondage). God is one and Souls are many. Pasam consists of anavam, kanmam (karma) and mayai (maya).

Saiva Siththantham (Siddhanta) philosophy explains the nature of these entities, their relationship and the way to liberation. It is praised by scholars as a perfect system of human thought, peculiar to the Tamil land.

The Saiva Philosophy is the choicest product of the Dravidian intellect. It is the most elaborate, influential and undoubtedly the most intrinsically valuable of all religions of India. It is peculiarly the South Indian and Tamil Religion. (Dr.G.U. Pope)

# Tamil New Year



Tamil New Year, called "Puthandu," is a special day for Tamil people all around the world. It's not just any regular day, it marks the start of a new year in the Tamil calendar. This day is full of tradition, meaning, and joy for Tamil families everywhere.



Siva.Vidhujan Sivasuthan
Grade 9
Melbourne, Victoria.

Tamil New Year is celebrated because it's the day when the sun moves to its true east. Tamil New Year marks the transition of the sun into the first sign of the zodiac, Melam/Medam (Aries), according to the Tamil solar calendar. This day marks a fresh start for everybody to reflect upon the year and find ways to I prove for the next. It's a special moment when everything feels aligned, and it reminds us of our connection with nature and especially the sun.

For Tamil people, Puthandu is more than just changing numbers on a calendar. It's a time to remember our roots, our culture, and our ancestors. It reminds the Tamil community of their ancient traditions and the importance of preserving one of the oldest cultures that is still practised today.

On Tamil New Year, a lot of different things are done. The day before Tamil new year starts we clean the house before we decorate our homes with kolams and other decorations. We visit temples to pray and ask for blessings for the new year.

In conclusion, Tamil New Year is a time of happiness and togetherness for Tamil families. As we celebrate Puthandu, we remember our traditions, our values, and the importance of staying connected with each other. It's a day filled with hope, gratitude, and excitement for the journey ahead.

# Story of the Banyan Tree



**Last month Summary :**
Sivakan , a 7 year old kid, had his friends come over to his house to play. One of his friends said that the cycle of life and death was a natural phenomena which happens because of the 5 elements. This made Sivakan say **"Inert things, by themselves cannot do anything independently on their own. The five great elements are not capable of effecting these changes. Therefore an intelligent and independent being is essential for these changes to take place."**

For a few days discussions were minimal and nobody raised any queries. One evening after a few quite days, we were playing in the shade. One of the friends pointed out a huge banyan tree nearby. Another one suggested, "Let us go and play under that big tree!"

The first friend said, "I am not thinking of playing. Do you see it is brimming with ripe berries?"

I said, "You are right. Fruits being ripe, it is feasting time for the birds!"

He said, "Even that did not cross my mind. It reminded me of an extraordinary, unforgettable experience I got under that tree. I was thinking of sharing it with you all."

"What is it my friend, did you happen to see a ghost on that tree? Did it tell you any ghost story or what?" I quipped playfully.

He replied calmly with all seriousness, "That is true. You may call it as you like. Remember, a few days back you told us that there must necessarily be an intelligent being to cause all the changes in the inert worldly objects. Ruminating on that thought I strolled around and relaxed under that banyan tree for a while.

All of a sudden when I looked up, I was taken aback on seeing thousands of tiny fruits all over the tree. It was so surprising and funny to see that the size of the fruits was not at all proportionate to the size of that tree!

Such tiny fruits on such a huge tree! If at all God had created this, what an ignorant God he must be! He does not seem to have sense of proportion at all. Immediately I thought of the huge pumpkin on the fragile creeper in our backyard. I was almost sure of the lack of proportion in the creation. Can't this huge tree bear huge fruits like pumpkin? This glaring contradiction created a sense of doubt and aversion towards the creator, if at all there is one. As I was thinking in that manner, a cool breeze was blowing and the branches were rustling. A tiny fruit fell down right on my belly and I cried out in pain.

That pain brought about a U-turn in the texture of my thinking! Oh, my God,even such a small fruit caused such an immense pain. What would have happened to me if this fruit would have been of the size of a pumpkin, as per my idea! I might have gotten crushed by its weight!

The creator must have been very thoughtful of such seemingly insignificant things! Thus appreciating His intelligence I paid my obeisance to the creator. Since then I have changed my stand. Now I can accept the necessity of an intelligent, independent creator of things in this world."

Saiva Philosophy Reference: The takeaway of this story is that God is always very thoughtful, and everything he makes, he does so for a reason even if they are seemingly insignificant.

# தென்னாட்டு நிகழ்வுகள்



பகைக்கேடு புத்தாண்டு சிறப்பு பூசை வழிபாடுகள் (13-04-2024)



பங்குனித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (24-03-2024)



பங்குனித் திங்கள் வளர்பிறை கழுவாய் வழிபாடுகள் (22-03-2024)



செல்லப்பா சுவாமிகள் குருபூசை வழிபாடுகள் (08-04-2024)



பணி ஓய்வுபெறும் அர்ச்சகர் தினகரன் ஐயா அவர்களிற்கான கௌரவிப்பு (18-04-2024)



தருமையாதீன தம்பிரான் மற்றும் சிவகுரு ஆதீனம் வேலன் சுவாமிகள் தென்னாடு வருகை (24-03-2024)

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் நாற்பத்து நான்காவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் “மதி அச்சகத்தில்” அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 மேழம் நல்லோரை சித்திரைத் திங்கள் 10ம் நாள் நிறைமதி அன்று (23-04-2024 செவ்வாய்க்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org